விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 156 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 10 வியாழக்கிழமை (23.05.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.03,
2ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

### அல்லைப்பிட்டி கடலில்
## தவறிவீழ்ந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
அல்லைப்பிட்டி கடலில் மீன்பிடிப்பதற்காக கட்டுமரத்தில் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.
15

### வலிகாமம் வடக்கில்
## விடுவிக்கப்பட்ட காணிகளுக்குள் செல்ல இராணுவம் தடை விதிப்பு

(யாழ்ப்பாணம்)
வலிகாமம் வடக்கில் அண்மையில் விடுவித்த நிலங்களுக்குள் வெடிபொருட்கள் இருக்கின்றன என்று தெரிவித்து அந்தப் பகுதிகளுக்குச் செல்ல இராணுவத்தினரால் தடை விதிக்கப்பட்டுள்ளது.
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் கடந்த மார்ச் 22 ஆம் திகதி வசாவிளான் மற்றும் பலாலி ஆகிய கிராமங்களான ஜே/244,245,252,253, 254 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் இருந்து 234 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படுகின்றன என்று அறிவிக்கப்பட்டது. நில
15

### சரசாலையில்
## விபரீத முடிவெடுத்த இளைஞன் மரணம்

(சாவகச்சேரி)
சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சரசாலை தெற்குப் பகுதியில்
15

# ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடத்தப்படும்
## அமைச்சரவைக்கு ரணில் அறிவிப்பு



(கொழும்பு)
**திட்டமிட்டபடி இந்த ஆண்டு உரிய காலப் பகுதியில் முதலில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**
நேற்று முற்பகல் நடைபெற்ற தனது அமைச்சரவைக் கூட்டத்தில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.
இதன்படி, அரசாங்கம் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு அல்ல, ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்காகவே பணம் ஒதுக்கியுள்ளது என அமைச்சர்களிடம் தெரிவித்தார்.
இதனிடையே, முதலில் பாராளுமன்ற
04

## தையிட்டி விகாரைக்கு எதிராக போராட்டம்


04

### மட்டக்களப்பு போதனாவில்
## ஒரே பிரசவத்தில் 4 குழந்தைகள்


15

## அடுத்த சில நாட்களில் பலத்த காற்றுடன் மழை
### கடற்றொழிலுக்குச் செல்ல வேண்டாம் என மீனவர்களுக்கு அறிவிப்பு

(கொழும்பு)
பல நாள் மீன்பிடிப் படகுகள் உட்பட அனைத்து மீன்பிடிப் படகுகளும் மறு அறிவித்தல் வரை பணிக்கு செல்ல அனுமதிக்கப்படாது என கடற்றொழில் மற்றும் நீரியல் வள திணைக்களம் தெரிவித்துள்ளது.
நேற்று ஊடகங்க
15

## இலங்கையின் நீதித்துறை கோட்டாபயவை காப்பாற்றியுள்ளது
### சிறீதரன் எம்.பி தெரிவிப்பு



(கொழும்ப)
மிருசுவில் படுகொலை சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழங்கிய இலங்கையின் சட்டம் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு பொது மன்னிப்பை வழங்கியமை நீதித்துறையை கேள்விக்குள்ளாக்கியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன்
15

## இலங்கையைச் சேர்ந்த ஐ.எஸ்.ஐ.எஸ்.பயங்கரவாதிகள்
### தற்கொலை தாக்குதலுக்கு தயாராக இருந்தனர் குஜராத் பொலிஸ் விசாரணையில் தெரிவிப்பு

(அகமதாபாத்)
இந்தியாவின் அகமதாபாத் சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்ட இலங்கையை சேர்ந்த நான்கு ஐ.எஸ். ஐ.எஸ் பயங்கரவாதிகள் என சந்தேகிக்கப்படும் நபர்கள், தற்கொலைத் தாக்குதல் நடத்துவதற்கு தயாராக இருந்ததாக குஜராத் பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையிலிருந்து தெரியவந்
02

## ஞானசார தேரருக்கு விடுதலை இல்லை

(கொழும்பு)
வெசாக் போயாவை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுவிக்கப் படவுள்ள 278 சிறைக் கைதிகளில் ஞானசார தேரர் இல்லை என சிறைச்
02

### தொல்புரத்தில் வாள்வெட்டு
## பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவம் ஒன்றில் காங்கேசன்துறை பொலிஸ் பிராந்திய குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் ஈடுபட்டதுடன் மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
தொல்புரம் பகுதியில் நேற்று முன்தினம்
15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது ஒலிக்கும் உங்கள் நாளிதழ்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
02 . 09 . 1948

மறைவு
24 . 04 . 2024

கடந்த 24.04.2024 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

## அமரர் சிவபாலன் மகேஸ்வரி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 22.05.2024 நேற்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 24.05.2024 நாளை வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும் (C-0423)

கேலன்கமம் வீதி, கட்டுடை,
மானிப்பாய்.

077 336 2970

இங்ஙனம்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



தோற்றம்
10 . 07 . 1937

மறைவு
22 . 05 . 2024

## திருமதி பரநிருபசிங்கம் ஜெயம்

யாழ். கொட்டடியைப் பிறப்பிடமாகவும் அராலி மேற்கு, வட்டு. மூளாய் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பரநிருபசிங்கம் ஜெயம் அவர்கள் 22.05.2024 புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தையல்முத்து தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பரநிருபசிங்கம்(மூளாய்) அவர்களின் பாசமிகு மனைவியும் அமரர் கமலாம்பாள் தில்லையம்பலம் (மலேசியன் பென்சினியர்), கணபதிப்பிள்ளை திரவியம் ஆகியோரின் அன்பு சகோதரியும் அருள்ராஜன்(ஓய்வுநிலை ஊழியர் தபாலகம், வட்டுக்கோட்டை), ஸ்ரீதரன்(ஆட்டோ ஸ்ரீ மாவடி), அமரர் தேவகுமார்(தேவா சக்தி FM) ஆகியோரின் அன்புத் தாயாரும் சாந்தநாயகி(தொல்புரம் விக்கினேஸ்வரா ஆசிரியை), பரமானந்தவல்லி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் தர்சிகன்(ஆசிரிய மாணவன் கல்வியியற் கல்லூரி கோப்பாய்), கௌசிகன், பானுஜா, தர்சினி, தர்மினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2024) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்துத்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

"மாவடி",
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்
077 271 9829

(C-0431)

## இலங்கையை...

துள்ளது.

இலங்கையில் இருந்து அகமதாபாத் நகருக்கு வந்த இலங்கையை சேர்ந்த நான்கு பேர் அகமதாபாத் சர்தார் படேல் சர்வதேச விமான நிலையத்தில் வைத்து ஞாயிற்றுக்கிழமை இரவு கைது செய்யப்பட்டனர்.

இவர்களை குஜராத் தீவிரவாத தடுப்புப்படையினர் கைது செய்து நேற்று முன்தினம் மதியம் செய்தியாளர்கள் சந்திப்பில் முன்நிறுத்தியதுடன், இதில் பல தகவல்கள் வெளியாகின.

இதன்படி, கைது செய்யப்பட்ட 33 வயதான மொஹமட் நுஸ்ரத் என்ற நபர் நீர்கொழும்பைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கொழும்பைச் சேர்ந்த 27 வயதான மொஹமட் நஃப்ரான், 43 வயதான மொஹமட் ரஷ்டீன் மற்றும் 35 வயதான மொஹமட் ஃபரிஷ் ஆகியோர் கைது செய்யப்பட்ட ஏனைய பயங்கரவாதிகளாவர்.

இவர்கள் இலங்கையிலிருந்து சென்னை வழியாக அகமதாபாத் நகருக்கு இண்டிகோ ஏர்லைன்ஸ் விமானம் மூலம் சென் றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் மொழியை மட்டுமே பயன்படுத்தும் நான்கு பயங்கரவாதிகளும் மொழிபெயர்ப்பாளர் உதவியுடன் விசாரிக்கப்பட்டனர்.

இவர்களிடம் இருந்து கைபேசி, இரு நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் விமானச் சீட்டுக்களும் ஒருவரின் பயணப் பொதியில் இருந்து ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் கொடியும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் இருந்து செயற்படும் ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பின் தலைவரான அபுவை கடந்த பெப்ரவரி மாதம் சமூக ஊடகங்கள் மூலம் இந்தக் குழு அடையாளம் கண்டுள்ளதாகவும், பின்னர் இவர்கள் கடும்போக்கு ISIS சித்தாந்தவாதிகளாக மாறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் அபுவின் ஆலோசனையின் பேரில் இந்தியாவில் தீவிரவாத தாக்குதல் நடத்த் திட்டமிட்டுள்ள நிலையில், இலங்கை பணத்தில் 4 லட்சம் ரூபாய் அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் தற்கொலைப்படை தாக்குதலுக்கு கூட தயாராகி இருந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

இவர்களது கைபேசிகளை ஆய்வு செய்ததில், அகமதாபாத் நகருக்கு அருகில் உள்ள நானாசிடோலா பகுதியில் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருப்பது தொடர்பான தகவல்கள் அந்நாட்டு பாதுகாப்பு படையினருக்கு அம்பலமாகியுள்ளது.

பாகிஸ்தானில் தயாரிக்கப்பட்ட 03 கைத்துப்பாக்கிகளும் அதற்கு பயன்படுத்தப்பட்ட 20 தோட்டாக்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட நான்கு இலங்கை ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகளுக்கு எதிராக சேகரிக்கப்பட்ட வாக்குமூலம் மற்றும் விசாரணை ஆதாரங்களின் அடிப்படையில், நாட்டின் தண்டனைச் சட்டம், சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் மற்றும் சட்டவிரோத ஆயுதங்கள் சட்டம் ஆகியவற்றின் கீழ் எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

(ம-7,10)

## ஞானசார...

சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மகா சங்கத்தினர் மற்றும் பௌத்த சபையின் பீடாதிபதிகள் வெசாக் போயா தினத்தில் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் ஞானசார தேரருக்கு மன்னிப்பு வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தனர். எனினும் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்படவுள்ள 278 சிறைக்கைதிகளில் ஞானசார தேரர் உள்ளடக்கப்படவில்லை.

வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்து 15 பேர் மற்றும் மஹர சிறைச்சாலையில் இருந்து 37 பேர் உட்பட நாடு முழுவதும் உள்ள சில சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் பொது மன்னிப்பு பெறவுள்ளவர்களில் பத்து பெண் கைதிகளும் அடங்குவர்.

(ம-7,10)


## தவறிவிட்டது

கோண்டாவில் பழனி ஆண்டவர்
கோவிலுக்கும் திருநெல்வேலி
சந்திக்கும் இடையில் பேஸ் உடன்
அடையாளஅட்டை(198829100970)
மற்றும் Driving license
தொலைந்துவிட்டது. கண்டெடுத்
தவர்கள் தொடர்புகொள்ளவும். (845)

077 532 5429


# 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு



தோற்றம்
25 . 03 . 1954

மறைவு
23 . 04 . 2024

கடந்த 23.04.2024 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர் செல்லையா கதிர்காமு

(கடைராசு முன்னாள் கொடிகாமம் திருபரன் களஞ்சிய உரிமையாளர், கொடிகாமம்)

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 23.05.2024 இன்று வியாழக்கிழமை காலை 3.00 மணிக்கு வீட்டில் நடைபெற்று கீரிமலையில் அஸ்தி கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து சபிண்டீகரண நிகழ்வுகள் 11.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

[illegible]பிள்ளையார் வீதி,
தாவளை இயற்றாலை, வரணி.

077 144 5596
077 418 8291
077 516 0901

செல்லையா சின்னம்மாவின்
பிள்ளைகள்

(0079)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பெங்களூரு தோத்துப்போச்சு ஹோலியின் கனவு தகர்ந்திடுச்சு

## குவாலிபயர் 2க்குள் நுழைந்தது ராஜஸ்தான்



"எலிமினேட்டர்" போட்டியில் அசத்திய ராஜஸ்தான் அணி 4 விக்கெட் டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று, பைனலுக்கான வாய்ப்பை தக்கவைத்துக் கொண்டது. பெங்களூரு அணி பரிதாபமாக வெளியேறியது.

அகமதாபாத்தில் உள்ள மோடி மைதானத்தில் நடந்த ஐ.பி.எல்., "எலிமினேட்டர்" போட்டியில் புள்ளிப் பட்டியலில் 3, 4ஆவது இடம் பிடித்த ராஜஸ்தான், பெங்களூரு அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் அணித் தலைவர் சஞ்சு சாம்சன் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

பெங்களூரு அணிக்கு அணித் தலைவர் டுபிளசி (17) சுமாரான ஆரம்பம் கொடுத்தார். விராட் ஹோலி (33), கிரீன் (27) நம்பிக்கை கொடுத்தனர். மக்ஸ்வெல் (0) ஏமாற்றினார். தினேஷ் கார்த்திக் (11) சோபிக்கவில்லை. ரஜத் படிதர் (34), லாம்ரர் (32) ஓரளவு கைகொடுத்தனர்.

20 ஓவர்கள் நிறைவில் பெங்களூரு அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 172 ஓட்டங்களை எடுத்தது.

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய ராஜஸ்தான் அணிக்கு ஜெய்ஸ்வால், காட்மோர் ஜோடி நல்ல ஆரம்பம் வழங்கியது. யாஷ் தயாள் வீசிய 3வது ஓவரில் 4 பவுண்டரி விரட்டி னார் ஜெய்ஸ்வால். சிராஜ், யாஷ் தயாள் ஓவரில் தலா 2 பவுண்டரி அடித்த காட்மோர் (20), பெர்குசன் பந்தில் ஆட்டமிழந்தார். ஜெய்ஸ்வால் 45 ஓட்டங்கள் எடுத்தார். சஞ்சு சாம்சன் (17) நிலைக்கவில்லை.

துருவ் ஜூரெல் (8) "ரன்-அவுட்" ஆனார். பின் இணைந்த ரியான் பராக் (36), ஷிம்ரன் ஹெட்மயர் (26) ஜோடி கைகொடுத்தது. பெர்குசன் பந்தை சிக்சருக்கு அனுப்பிய பாவெல் வெற்றியை உறுதி செய்தார்.

ராஜஸ்தான் அணி 19 ஓவர் களில் 6 விக்கெட்டுக்கு 174 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. பாவெல் (16) ஆட்ட மிழக்காமல் இருந்தார்.

"எலிமினேட்டரில்" வெற்றி பெற்ற ராஜஸ்தான் அணி, நாளை சென்னையில் நடக்கும் தகுதிச் சுற்று-2ல் ஹைதராபாத் அணியை சந்திக்கிறது. இதில் வெற்றி பெறும் அணி, இறுதிப் போட்டியில் (மே 26, சென்னை) கொல்கத்தாவை எதிர்கொள்ளும்.

**கோலிக்கு மிரட்டலா**

"எலிமினேட்டர்" போட்டிக்கான பெங்களூரு அணி வீரர்களின் பயிற்சி முகாம் அகமதாபாத், குஜராத் கல்லூரி மைதானத்தில் நடக்க இருந்தது. ஆனால், ஹோலி உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக செய்தி வெளியானது. இதனால் பெங்களூரு அணியின் பயிற்சி, செய்தியாளர் சந்திப்பு இரத்து செய்யப்பட்டது. ராஜஸ்தான் வீரர்கள் வழக்கம் போல பயிற்சி செய்தனர். இதுகுறித்து குஜராத் கிரிக்கெட் சங்கம் வெளியிட்ட அறிக்கையில், "பெங்களூரு அணியினருக்கு பயங் கரவாத அச்சுறுத்தல் எது வும் இல்லை. வெப்ப அலை காரணமாகவே பயிற்சி இரத்தானது," என தெரிவித்தது.




**66 விக்கெட்டுக்கள்**

ஐ.பி.எல்., தொடரில் அதிக விக்கெட் சாய்த்த ராஜஸ்தான் பந்து வீச்சாளரானார் சகால். இதுவரை 66 விக்கெட்டுக்களைச் சாய்த்துள்ளார். அடுத்த இடத்தில் சித்தார்த் திரிவேதி (65 விக்கெட்) உள்ளார்

**8000 ஓட்டங்கள்**

பெங்களூருவின் ஹோலி, தனது 29வது ஓட்டங்களை எட்டிய போது ஐ.பி.எல்., அரங்கில் 8000 ஓட்டங்கள் எடுத்த முதல் வீரரானார். இதுவரை 252 போட்டியில், 8 சதம் உட்பட 8004 ஓட்டங்கள் எடுத்துள்ளார். அடுத்த இடத்தில் தவான் (6769 ஓட்) உள்ளார்.

**18 "டக்-அவுட்"**

ஐ.பி.எல்., அரங்கில் அதிக முறை "டக்-அவுட்" ஆன வீரர்கள் வரிசையில் முதலிடத்தை தினேஷ் கார்த்திக் உடன் பகிர்ந்து கொண்டார் மக்ஸ்வெல். இருவரும் தலா 18 முறை இப்படி ஆட்டமிழந்தனர். அடுத்த இடத்தில் ரோகித் சர்மா (17 முறை) உள்ளார்.

# சென்னையுடனான சொந்தம் நெடுங்கால பந்தம்...

## தடம் மாறிடாத தோனி பாசம்




"தொழில்ரீதியான விளையாட்டில் வயதுக்கு சலுகை கிடைக்காது," என தோனி தெரிவித்தார்.

இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவர் தோனி. 42 வயதிலும் உடல் அளவில் "பிட்" ஆக உள்ளார்.

ஐ.பி.எல்., தொடரில் காயத்தை பொருட்படுத்தாது சென்னை அணிக்காக 14 லீக் போட்டிகளிலும் பங்கேற்றார். 161 ஓட்டங்கள் குவித்தார். இவரது சிக்சர் அடிக்கும் திறனை பார்த்து ரசிகர்கள் வியந்தனர். இன்னும் இரண்டு ஐ.பி.எல்., சீசனில் பங்கேற்கலாம் என பாராட்டினர்.

இது குறித்து "தல" தோனி கூறியது, முழங்கால் சத்திரசிகிச்சை காரணமாக ஓர் ஆண்டு கிரிக்கெட் விளையாட முடியவில்லை. இந்தச் சூழலில் தான் இம்முறை ஐ.பி.எல்., தொடரில் களமிறங்கினேன்.

இளம் வீரர்களுடன் போட்டியிட வேண்டும் என்றால், உடல் அளவில் நான் "பிட்" ஆக இருப்பது அவசியம். தொழில்ரீதியான விளையாட்டில் பங்கேற்பது எளிதான காரியம் அல்ல. இங்கு வயதுக்கு எல்லாம் தள்ளுபடி அல்லது சலுகை அளிக்க மாட்டார்கள். உணவு கட்டுப்பாடு, பயிற்சி விடயத்தில் கவனம் செலுத்தி, அர்ப் பணிப்பு உணர்வுடன் விளையாடினேன். கவனச் சிதறலை தவிர்க்க, சமூகவலைதளங்களிலிருந்து விலகி இருந்தேன்.

சென்னை அணியுடனான உறவு உணர்வுபூர்வமானது. இரண்டு மாதம்

**மாறாத நாய் பாசம்**

சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற போதும், சுறுசுறுப்பாக இருக்க முயற்சித்தேன். விவசாயம், பைக் ஓட்டுவது, பழைய கார்களை ரசிப்பது போன்றவை மனஅழுத்தத்தில் இருந்து விடுபட உதவியது. நாய், பூனை போன்ற செல்லப்பிராணிகளை வளர்க்கிறேன். இவை எப்போதும் அன்பாக இருக்கும். நான் போட்டியில் தோற்று வந்தாலும், என் நாய் அதே அன்புடன் பழகும். யாரிடமும் மரியாதையை எதிர்பார்க்கக்கூடாது. அது, தானாக கிடைக்க வேண்டும்.

சென்னை வந்து விளையாடி விட்டு மீண்டும் ராஞ்சி செல்வது போல கிடையாது. சென்னை உடனான பந்தம் நீடிக்கும். இவ்வாறு தோனி கூறினார்.

## தையிட்டி...

சட்டவிரோத தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டம் நேற்று மீண்டும் ஆரம்பமானது.

நேற்று ஆரம்பமான இந்தப் போராட்டமானது எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை தொடர்ந்து நடைபெறும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ் தெரிவித்துள்ளார்.

குறித்த விகாரையில் ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

நேற்றைய போராட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-7,10)

## ஜனாதிபதித்...

தேர்தலை நடத்த வேண்டும் என்ற கோரிக்கை அண்மைய நாட்களாக கொழும்பு அரசியல் களத்தில் பேசப் பட்டு வந்தது.

அத்துடன், விரைவில் பாராளுமன்றம் கலைக்கப்படும் என்ற பேச்சும் அடிபட்டது. இவ்வாறான நிலையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது நிலைப்பாட்டை அறிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் -26, நான்காம் குறுக்குத் தெரு, 07 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் பூரண உதயம் றெஜினாவும், V.A.யேசுதாசனும் என ஆதனப் பதிவேட்டில் பதியப் பட்டுள்ளது.

குறித்த ஆதனம் தேவசகாயம் இராசரத்தினம் யோசப் ஞானம் யோசப் அவர்கள் 10.01.1968 ஆம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு A.அன்ரனி முகதாவில் 63 ஆம் இலக்க சீதன உறுதி மூலம் வைத்தி ஏபிரகாம் யேசுதாசன் பெண் பூரண உதயம் றெஜினா ஜோசப்பிற்கு வழங்கியுள்ளார். குறித்த ஆதனம் வைத்தி ஏபிரகாம் யேசுதாசன் பூரண உதயம் றெஜினா ஜோசப் அவர்கள் 11.09.1983 ஆம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு D.இராஜதுரை முகதாவில் 5425 ஆம் இலக்க ஈடு உறுதி மூலம் இலங்கை போக்குவரத்து சபையின் ஊழியர் சேமலாப நிதிக்குழுவின் செயலாளருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் ஜெனிற்றா பிறேமளா மத்தியாஸீம், அன்ரனி சீவரட்ணம் அமிர்தநாதனும் பெண் கலிஸ்ரா கௌரியும் தங்கள் அற்றோனித்தத்து வகாரி யாழ்ப்பாணம் நான்காம் குறுக்குத்தெரு, இல.100 ஐச் சேர்ந்த வைதீகவனஜா செல்வரத்தினம் மூலம் வெளிப்பட்டு 02.10.2021 ஆம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு சி.இளங்கீரன் முகதாவில் 13691 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் கிறிஸ்டில்டா கொன்சி பெலொக்ஸீஸ் றெனாட்டிற்கு வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், சுண்டிக்குளி கோவிற்பற்று, யாழ்ப்பாண மாநகரசபை யாழ்ப்பாணம் பிரதேச செயலகம், கிராம அலுவலர் பிரிவு J/72 யாழ்ப்பாண நகரம் 4 ஆம் பிரிவு இறை: 'Allotment of Land' விஸ்தீரணம் நிலப்பரப்பு 1 குளி 5, 1/2 இதில் சொரியலாய் 1/3 பங்கும். இதனை மறுபங்காளர்கள் நிந்தப்படுத்திப் பிரிவிட்டு ஆட்சிப்படுத்தியபடி மிகுதி விஸ்தீரணம் நிலப்பரப்பு (0) பூச்சியம் குளி (8.09) எட்டு தசம் பூச்சியம் ஒன்பதும், வீட்டின் பகுதியும் அதற்குச் சேர்ந்தவைகளும். ஆனால் இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் J.மனுவல் அவர்கள் 24.07.1950 ஆம் திகதியில் தயாரித்த 516 ஆம் இலக்க நில அளவைப் படத்தில் துண்டு-2 எனச் சுட்டப்பட்டுள்ளது. இதன் எல்லை:-

கிழக்கு :- நான்காம் குறுக்கு வீதி

வடக்கு :-நன்கொடை ஏற்பவரின் ஆதனம்.

மேற்கு :-மொகிதீன் அப்துல்காதரின் ஆதனம்.

தெற்கு :- எமிலியானஸ் ஜஸ்ரின் பெண் புளோரினாவின் ஆதனம். இதடங்கலும்

தற்போது இவ்வாதனத்தை கிறிஸ்டில்டா கொன்சி பெலொக்ஸீஸ் றெனாட் என்பவர் தனது பெயரை எமது ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது கிறிஸ்டில்டா கொன்சி பெலொக்ஸீஸ் றெனாட் என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(சி-421)

**ஆணையாளர்,**
**யாழ்.மாநகரசபை.**

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் -24, சப்பல் வீதி, 66 எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் C.T.ஜோசுவா பெண் மேரி நல்லம்மா என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

இவ்வாதனம் குறித்த ஜோசுவா பெண் மேரி நல்லம்மா எவருக்கும் உரித்துமாற்றம் செய்யாது மரணிக்க மாதாவழி முதுசமாக அவரது பிள்ளைகளான லெஸ்லி ஜோசுவா தர்மராஜ் மற்றும் இயு ஜின் ஜோசுவா சந்திரராஜ் என்பவர்களுக்கு வந்தடைந்தது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், இல-30, சப்பல் வீதியைச் சேர்ந்த லெஸ்லி யோசுவா தர்மராஜ் 17.08.1981 ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு ச.செல்வராஜா முகதாவில் 3502 ஆம் இலக்கத்தில் அறுதி உறுதி மூலம் அவரது சகோதரரான இயுஜின் ஜோசுவா சந்திரராஜ் என்பவருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் தமக்குரித்தானது என இயூஜின் ஜோசுவா சந்திரராஜ் உம் பெண் செபமலர் உம் சேர்ந்து 11.01.2012 ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு ராஜ்மோகன் பாலேந்திரா முகதாவில் 560 ஆம் இலக்க பிரகடனப்படுத்தலும், உறுதிப்படுத்தலும் உறுதி மூலம் வெளிப்படுத்தி உறுதிப்படுத்தியுள்ளனர்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், இல-66, சப்பல் வீதியைச் சேர்ந்த தற்போது அவுஸ்ரேலியாவில் வசிக்கும் இயூஜின் ஜோசுவா சந்திரராஜ் உம் பெண் செபமலர் உம் 11.01.2012 ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு ராஜ்மோகன் பாலேந்திரா முகதாவில் 561 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் கிறிஷாந்த சந்திரராஜ்ற்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், இல-66, சப்பல் வீதியைச் சேர்ந்த தற்போது அவுஸ்ரேலியாவில் வசிக்கும் கிறிஷாந்த சந்திரராஜ், இல-37, மகாத்மாகாந்தி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தனது அற்றோணித்தத்துவகாரர் பொன்னுத்துரை கிறிஸ்தோப்பர் மூலம் தோன்றி, 20.06.2019 ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு மு.றெமிடியஸ் முகதாவில் 2301 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம், இல-92, 2 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜோசப் முத்தையா ரவீந்திரனுக்கு வழங்கியுள்ளார்.

**ஆதன விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று யாழ்ப்பாண நகரத்தின் 4 ஆம் பிரிவு, பிரதேச செயலகம்- யாழ்ப்பாணம், கிராமசேவையாளர் - J/72, யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட சப்பல் வீதியில் அமைந்துள்ள வரிமதிப்பீட்டிலக்கம் "66 ஐக்" கொண்ட ஆதனம் நிலப்பரப்பு (1) ஒன்று குளி (11.08) பதினொன்று தசம் சைபர் எட்டு. இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் S. சுப்பிரமணியம் அவர்களால் 2011.05.20 ஆம் திகதி அளந்து வரைந்த 1715 ஆம் இலக்கப் படத்தில் துண்டு 1,2 எனக்காட்டப்பட்டுள்ளது. இது மீண்டும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் P. தனராஜா அவர்களால் 2019.06.10 ஆம் திகதி அளந்து வரைந்த 3757 A இலக்கப்படத்தில் துண்டு 1 எனக்காட்டப்பட்டுள்ளது. இதன்படி நிலப்பரப்பு (1) ஒன்று குளி (9) ஒன்பது. இதன் எல்லைகள்.

கிழக்கு- சவிரிமுத்து ஞானப்பிரகாசத்தின் ஆதனம்

வடக்கு:- சப்பல் வீதி

மேற்கு :-2 ஆம் குறுக்குத்தெரு

தெற்கு :-ஜோசப் முத்தையா ரவீந்திரனின் ஆதனம், இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்

தற்போது ஜோசப் முத்தையா ரவீந்திரன் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ் ஆதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது ஜோசப் முத்தையா ரவீந்திரன் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(சி-422)

**ஆணையாளர்,**
**யாழ்.மாநகரசபை.**

# இராசிபலன்

23.05.2024
வைகாசி 10, வியாழக்கிழமை
பூரணை முன்னிரவு 7.37 மணிவரை
விசாகம் முற்பகல் 9.36 மணிவரை

சுபநேரம் -7.22-8.52 மணிவரை
இராகுகாலம்-1.22-2.52 மணிவரை
பூரணை விரதம், வெசாக் பண்டிகை

சந்திராஷ்டமம்
ரேவதி.

**வளவன்**




மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், எடுத்த காரியங்களில் சிறு தடை தாமதம் என்பன ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை காட்ட வேண்டிய நாள்.




நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.




ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் அச்சுறுத்தல்கள் அகலும், தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள்.




பிள்ளைகளின் கல்வி நலனில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.




சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், வாகன யோகத்தால் வளம் காணும் நாள், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.




நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள், போசன சுகமுண்டு.




பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்த சேரலாம்.




விரும்பிய காரியம் விரும்பிய படியே கைகூடும், குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், போசன சுகமுண்டு, கற்பனை மிகுதியான நாள்.




திட்டமிட்ட பயணமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சுப காரியச் செலவுகளில் தாரளம் காட்டுவீர்கள், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம்.




பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள்.




நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கூடும், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம்.




தொழில் ரீதியான பயணம் அனுகூலம் தரும், அன்பால் சாதித்துக் காட்டும் நாள், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, நிலுவைகள் வந்து சேரலாம்.

**சாதிப்பவன் எப்போதும் செயற்பட்டுக் கொண்டிருப்பான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் - நல்லூர் சிவன் கோவில்(அம்மன்) தேர்த்திருவிழா நேற்றுக் காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது.
(படங்கள் : சிவசாந்தன்)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்).

வல்லமை சமூக மாற்றத்திற்கான போராட்ட இயக்கத்தின் ஏற்பாட்டில் நெருக்கடி மிக்க சமகால அரசியல் பொருளாதார சூழலை விளங்கிக் கொள்ளலும் ஆரோக்கியமான மாற்றங்களுக்கான தொடர் செயல்வாதப் பயணங்களை கொண்டு செல்வது தொடர்பான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மதியம் 2 மணி வரை தந்தை செல்வா கலையரங்கில் இடம்பெறவுள்ளது. (நி-6)

# பாணினுள் கண்ணாடித் துண்டுகள்
## வெதுப்பகத்திற்கு எதிராக சட்டநடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மருதனார்மடம் பகுதியில் உள்ள கடையொன்றில் நேற்று முன் தினம் ஒருவர் பாண் வாங்கியுள்ளார். அதனை வீட்டில் சாப்பிட முனைந்த போது பாணினுள் இருந்து உடைந்த போத்தல் கண்ணாடித் துண்டுகள் காணப்பட்டுள்ளன. அது தொடர்பில் அப்பகுதி சுகாதார பரிசோதகருக்கு தகவல் அறிவிக்கப்பட்டதை அடுத்து அவர் முனனெடுத்த விசாரணைகளில் கடைக்கு பாண் விநியோகம் செய்தது, சுன்னாகம் பகுதியில் உள்ள வெதுப்பகம் என தெரிய வந்துள்ளது.

அதனை அடுத்து குறித்த வெதுப்பகத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க பொது சுகாதார பரிசோதகர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (நி-6-33)



# வங்காலை பகுதிகளில் உட்புகுந்த கடல்நீர்
## அச்சத்தில் மக்கள்

(மன்னார்)

நானாட்டான் பிரதேச செயலக பிரிவில் உள்ள வங்காலை வடக்கு மற்றும் மேற்கு பகுதிகளில் நேற்று புதன்கிழமை மதியம் திடீரென கடல் நீர் மக்கள் வசிக்கும் பகுதிக்குள் உட்புகுந்துள்ளது. மன்னார் மாவட்டத்தில் அதி காலை முதல் பலத்த காற்று வீசி வருகின்ற நிலையில் வங்காலை வடக்கு மற்றும் மேற்கு பகுதிகளில் மதியம் திடீரென கடல் நீர் உட்புகுந்ததோடு கடற்கரையில் கட்டப்பட்டிருந்த படகுகள் மற்றும் வலைகள் நீரில் மிதந்து உள்ளது. எனினும் படகுகளுக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை என மீனவர்கள் தெரிவித்தனர். திடீரென கடல் நீர் உட்புகுந்தமையினால் வங்காலை மீனவர்கள் மற்றும் கிராம மக்கள் அச்சத்திற்கு உள்ளாகியுள்ளனர். (நி-6-285)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு :1993- இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா:38 1/2<br>உயரம் : 5'7"<br>தகைமை/தொழில்:இளங்கலைமாணி.DO<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/14512 | பிறப்பு- 1996- இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா- 67<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: MBBS, Doctor<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer<br>தொ.இ: G/14537 |
| பிறப்பு: 1987- இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>சூரி செவ் 7 இல்<br>உயரம் : 5'5"<br>தகைமை/தொழில்-BSC, Quantity Surveyor. சைவ போசனம்<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer<br>சைவ போசனம்<br>தொ.இ: B/14513 | பிறப்பு- 1995- இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 20<br>உயரம் : 5'2"<br>தகைமை/தொழில்: MBBS, Doctor<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Banker, IT Field<br>தொ.இ: G/14538 |
| பிறப்பு: 1995- இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 27 உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:NCT. ஒப்பந்தக்காரர். பட வரைஞர்<br>எதிர்பார்ப்பு: அரச/தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/14515 | பிறப்பு -1998- இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 26 1/4<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Bsc (Chemistry) Following<br>எதிர்பார்ப்பு: தகுதியான வரன்<br>தொ.இ: G/14541 |
| பிறப்பு: 1993- இந்து<br>நட்சத்திரம் :உத்தரம்<br>கி.பா: 47 உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: Chemical Engineering, MSC, International Account Manager<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/14516 | பிறப்பு -1993- இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BSC, Lecturer<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Lecturer, Accountant, Degree Holder<br>தொ.இ: G/14544 |

கல்யாணமாலை
இல. 3, 2 ஆம் ஒழுங்கை,பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# நயினை நாகபூசணி ஆலயத்திருவிழா;
## முன்னாயத்த கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத் திருவிழா தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நயினாதீவு ஸ்ரீநாகபூசணி அம்மன் ஆலயத் திருவிழா எதிர்வரும் 2024.06.07 தொடக்கம் 2024.06.22 வரை நடைபெறவுள்ளதோடு அனைத்து பக்தர்களும் சிறப்பான முறையில் எந்த வித இடையூறும் இல்லாமல் நாகபூசணி அம்பாளை தரிசிப்பதை உறுதிப்படுத்தும் வகையில் இந்தக் கலந்துரையாடல் ஒழுங்குபடுத்தப்பட்டது.

இக் கலந்துரையாடலில் திருவிழாக் காலங்களில் வழமைபோல் யாழ். பேருந்து தரிப்பு நிலையத்தில் இருந்து குறிகட்டுவான் வரையிலான இலங்கை போக்குவரத்து சேவை மற்றும் தனியார் பேருந்து சேவைகளின் ஒருவழிக் கட்டணம் 187 ரூபா என தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை குறிகட்டுவானில் இருந்து ஆலயம் செல்வதற்கான படகு போக்குவரத்து ஒரு வழிக் கட்டணம் 80 ரூபாய் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அத்தோடு கடற்போக்குவரத்து நேரத்திற்கமைய தனியார் போக்குவரத்து மற்றும் இலங்கை போக்குவரத்து பேருந்து சேவை காலை 6 மணி தொடக்கம் மாலை 7.30 மணிவரையிலும் நடைபெறவுள்ளது.

கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க.ஸ்ரீமோகன், உதவி மாவட்டச் செயலாளர் உ. தர்சினி, பிராந்திய வைத்திய அதிகாரி கேதீஸ்வரன், அறங்காவலர் சபைத் தலைவர் (நாகபூசணி அம்மன் ஆலயம்) பரமலிங்கம் மற்றும் பிரதேச செயலாளர் (வேலணை), சுகாதாரத் துறைசார் பங்குதாரர்கள், இலங்கை போக்குவரத்து சபை உத்தியோகத்தர்கள், கடற்படை அதிகாரிகள், பொலிஸ் தரப்பினர், பிரதேச சபை பங்குதாரர்கள், துறை சார் திணைக்களத் தலைவர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை பாராளுமன்றில் ஈரான் ஜனாதிபதிக்கு இரங்கல்

(கொழும்பு)

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று புதன்கிழமை பாராளுமன்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் மறைந்த ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசிக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, நடவடிக்கைகளின் ஆரம்பத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரேமதாச மறைந்த ஈரான் ஜனாதிபதிக்கு பலர் சார்பாக தனது இரங்கலைத் தெரிவித்தார்.

இவர்கள் அனைவருக்கும் இஸ்லாத்தின் படி சொர்க்கவாசல் திறக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

பின்னர் ஆளுங்கட்சியின் பிரதம அமைப்பாளர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் வேண்டுகோளுக்கு இணங்க அமைச்சர்கள் உட்பட அனைவரும் மறைந்த ஈரான் ஜனாதிபதி உள்ளிட்டோரை நினைவுகூர்ந்து ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

# மணல் ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட மணல் சுண்டுக்குழி வீதியிலுள்ள மணல் களஞ்சியத்திலும் அரியாலை கனகரத்தினம் வீதியிலுள்ள மணல் களஞ்சியத்திலும் வைத்து எதிர்வரும் 25.05.2024 ஆம் திகதி காலை 9 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது என யாழ்.நீதிவான் நீதிமன்றத்தின் பதிவாளர் அறிவித்துள்ளார். (நி-6)


## தவறிவிட்டது

10/4, மதவடி ஒழுங்கை மாவிட்டபுரத்தை முகவரியாகக் கொண்ட சின்னத்துரை கார்த்திகேயன் 198204302185 எனும் இலக்கத்தைக் கொண்ட எனது தேசிய அடையாள அட்டை திருநெல்வேலிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தந்து உதவுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**தொடர்பு: 077 481 1590**
**077 748 0796**

(841)

**லங்கா மஹறால் (PVT) LTD**

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(1354)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**00919566156719**

Western Union MoneyGram Ria Money Transfer

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974




**75 வருடங்களுக்கு முன்னர் இத்தினத்தில் (1949 வைகாசி விசாகம்) யாழ்ப்பாணத்து மாமுனிவர் சிவயோக சுவாமிகளின் கொழும்புத்துறை குடிசைக்கு ஓர் அமெரிக்க இளைஞர் வந்தார்.**

**அவரின் வருகைக்காக காத்திருந்த யோகசுவாமிகள் அவருக்கு 'சுப்பிரமுனிய' எனும் நாம தீட்சை வழங்கினார். அவரின் முதுகில் ஓங்கி அடித்து இந்த அடி அமெரிக்காவிலே கேட்கும் உலகெங்கும் சென்று சிங்கம்போல் கர்ச்சிப்பாய். நீ பல ஆலயங்கள் அமைத்து பலருக்கு உணவளிப்பாய் என்று ஆசி வழங்கினார்.**



சிவயோக சுவாமிகளின் அருட் தீட்சை பெற்ற பிரதான துறவுச் சீடர்களுள் ஒருவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள். பிறப்பால் அமெரிக்கரான இவர் 1927 ஆம் ஆண்டு தை மாதம் 5ஆம் திகதி கலிபோர்னியாவில் பிறந்தார். இளம் வயதிலேயே ஆன்மீக தாகம் கொண்ட இவர் கீழைத்தேசம் நோக்கி வந்தார். அக்காலத்தில் அளவெட்டி கிராமத்தில் வாழ்ந்த கந்தையா செட்டியார் என்ற சிவயோக சுவாமிகளின் அடியவர். 1949 ஆம் ஆண்டு வைகாசி பூரணை தினத்தன்று அந்த இளைஞனை கொழும்புத்துறையில் உள்ள சிவயோக சுவாமிகளின் ஆச்சிரமத்திற்கு அழைத்து வந்தார். அவரின் வருகையை எதிர்பார்த்திருந்த சிவயோக சுவாமிகள் அவருக்கு சுப்பிரமுனிய சுவாமிகள் எனும் நாமதீட்சை அளித்தார்.

சிவயோக சுவாமிகள் குருதேவருக்கு பஞ்சாட்சர மந்திரத்தை உபதேசம் செய்து அவரின் வாழ்வின் பணிகள் குறித்து அறிவுரைகளையும் வழங்கினார். சிவயோக சுவாமிகள் குருதேவரின் முதுகிலே பலமாக ஓங்கி அடித்து "இந்த அடி அமெரிக்காவிலே கேட்கும்! இனி உலகெங்கும் சென்று சிங்கம் போல் கர்ச்சிப்பாய். நீ பல ஆலயங்கள் அமைத்து பலருக்கு உணவளிப்பாய்" என்று ஆசிவழங்கினார். இந்த அடி குருதேவரை நாதர் சித்தர் மரபில் சேர்க்கும் தீட்சையாக அமைந்தது. அப்போது குருதேவருக்கு வயதோ இருபத்தியிரண்டு, சிவயோக சுவாமிகளுக்கோ எழுபத்தியேழு.

சுப்பிரமுனிய சுவாமிகள் இலங்கையில் இருந்த காலத்தில் சிவயோக சுவாமிகளின் ஆசியுடன் அளவெட்டி எனும் கிராமத்தில் ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமத்தை நிறுவினார். இன்று உலகளாவிய ரீதியில் சேவையாற்றி வரும் சைவசித்தாந்த தர்ம சபை இங்குதான் ஆரம்பமாகியது. சிவயோக சுவாமிகளின் ஆணைப்படி குருதேவர் அமெரிக்காவுக்கு திரும்பி வந்து ஏழு ஆண்டுகள் தாம் செய்யவேண்டிய பணிகளுக்கு தன்னை ஆயத்தமாக்கும் சாதனைகளில் ஈடுபட்டார்.

தினசரி சாதனையாலும் ஆழ்ந்த தியானத்தாலும் ஞானதிருஷ்டி, ஞானதரிசனம் ஆகிய அக ஆற்றல்கள் குருதேவருக்கு வெளிப்பட்டன. 1957 ஆம் ஆண்டு தனது முப்பதாவது வயதில் சுப்பிர முனிய சுவாமிகள் கலிபோர்னியாவில் இமாலய கலாபீடத்தை நிறுவி அமெரிக்காவின் முதலாவது இந்துக் கோயிலையும் ஸ்தாபித்தார். கீழைத் தேசத்துக்கும் மேலைத் தேசத்துக்கும் இடையில் மையமாக விளங்கும். ஹவாய் தீவுகளில் ஒன்றான குவை என்னும் தீவில் புனித வைலுவ நதிக்கரையில் 1970 ஆம் ஆண்டு 459 ஏக்கர் நிலப்பரப்பில் குருதேவர் குவை சைவ ஆதீனத்தை நிறுவினார்.

இங்கு ஆறடி உயரமான சிவ நடராஜரை மூல மூர்த்தியாகக் கொண்ட கோயிலை ஸ்தாபித்தார். இதுவே மேலைத் தேசத்தில் அமைந்த முதலாவது சிவன் கோயிலாகும். 16 தொன் எடையுள்ள பெரிய நந்தியை உடைய இக் கோயிலில் எட்டுக் காலப் பூசைகளையும் ஆதீனத்துத் துறவிகள் செய்து வருகின்றனர்.

குருதேவருக்கு 1975 ஆம் ஆண்டு மாசி மாதம் சிவபெருமான் ஓர் அகக்காட்சி அருளினார். இந்த அகக்காட்சியின்படி புனித வைலுவ நதிக்கரையில் குருதேவர் ஒரு சுயம்புலிங்கத்தைக் கண்டார். இச்சுயம்புலிங்கத்தை மையமாகக் கொண்டே சன்மார்க்க இறைவன் கோயில் உருவாகியுள்ளது. சன்மார்க்க இறைவன் கோயில் நுழைவாயிலில் ஓர் உருத்திராட்ச மரச்சோலை. இச்சோலையில் இருந்து கோயிலுக்கு இருமருங்கிலும் கொன்றை மரங்களையுடைய ஒரு நீண்ட நேரிய பாதை, இதுவே சன்மார்க்கம். இப்பாதையில் ஓர் ஆலமர நிழலில் விநாயகப் பெருமான் எழுந்தருளி உள்ளார். அவரிடம் விடைபெற்றுச் செல்லும்போது வழியில் ஒரு குன்றின் மேல் முருகப் பெருமான் வேல் வடிவில் தரிசனம் தருகின்றார்.

அவரையும் தரிசித்து நேரே சென்றால் சுயம்புலிங்கேஸ்வரரை நாம் அடையலாம். நூற்றியெட்டு வில்வ மரங்களுக்கு மத்தியில் வீற்றிருக்கும் இந்த சுயம்புலிங்கேஸ்வரருக்கு 1975 ஆம் ஆண்டு முதல் நித்தியபூசைகள் நடைபெற்று வருகின்றன. சுயம்புலிங்கேஸ்வரப் பெருமானுக்கு வலப்புறமாக இறைவன் கோயில் அமைந்துள்ளது. முற்றிலும் கருங்கற்களினால் ஆகம விதிமுறைப்படி இந்தியாவிலே செதுக்கப்பட்டு அமெரிக்காவிற்கு கொண்டு வரப்பட்டு அமைந்த கோயிலாக பல தலைமுறைகளுக்கு நிலைத்து நிற்கக் கூடிய வகையில் கட்டப்பட்டுள்ளது.

இறைவன் கோயில் மூலஸ்தானத்தில் ஓர் ஸ்படிகலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இது ஆறு கோணங்களையுடைய 700 இறாத்தல் எடையும் 39 அங்குல உயரமும் கொண்ட அற்புதமான உலகின் மிகப்பெரிய ஸ்படிகலிங்கமாகும்.

1979 ஆம் ஆண்டு குருதேவர் HINDUSIAM TODAY என்னும் சஞ்சிகையை ஆரம்பித்தார். இந்தச் சஞ்சிகை உலகெங்கும் வாழும் இந்துக்களின் குரலாக சர்வதேச ரீதியில் ஒலிக்கின்றது. இந்துசமயம் பற்றிய பல நூல்களையும் குருதேவர் எழுதியுள்ளார். இன்று இவை பலமொழிகளில் எமக்கு கிடைக்கின்றது. இந்தத் தொழில்நுட்ப யுகத்தில் குருதேவரின் துறவிகள் அதிநவீன கொம்பியூட்டர்களின் துணையுடன் பல நூல்களையும் பிரசுரங்களையும் வெளியிட்டு வருகின்றனர்.

அமெரிக்காவிலும், மேலைத்தேசங்களிலும் பல இந்துக் கோயில்கள் உருவாக குருதேவர் மூல காரணமாக இருந்துள்ளார். உலகெங்கும் கோயில்களைக் கட்டிவரும் இந்து சமூகத்தினருக்கு ஆலோசனைகளை வழங்கியும், அவர்களின் கோயில்களுக்கு மூர்த்திகளை வழங்கியும், இடையிடையே இந்தக் கோயில்களுக்கு நேரில் சென்றும் குருதேவர் அவர்களை வழிநடத்தி வந்தார்.

1982 ஆம் ஆண்டு சுப்பிரமுனிய சுவாமிகள் கோப்பாயில் ஸ்ரீ சுப்பிர முனிய கோட்டத்தை நிறுவினார். 1983 இல் இலங்கையில் நடைபெற்ற இனக் கலவரத்தின் பின் சுவாமிகள் "இலங்கைத் தமிழர் அகதி நிவாரணநிதி" என ஒரு நிதியத்தை உருவாக்கி அதன் மூலம் ஆயிரக்கணக்கான பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்கியுள்ளார். "இந்துகலாசார அறக்கட்டளை" என்னும் ஒரு ஸ்தாபனத்தை உருவாக்கி அதன் மூலம் சிறுவர், முதியோர் இல்லங்கள், சமய ஸ்தாபனங்கள் போன்றவற்றுக்கு உதவி வந்துள்ளார்.

1986 இல் புதுடில்லியில் கூடிய உலகசமய பாராளுமன்றம் குருதேவரின் உலகளாவிய சமயப்பணியைப் பாராட்டி அவருக்கு 'ஜகதாச்சாரியர்' என்ற விருதினை வழங்கிக் கௌரவித்தது. ஐக்கியநாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் நாயகம் உயர் திரு. ஊத்தான் அவர்களின் ஞாபகார்த்தமாக வருடாந்தம் வழங்கப்படும் சமாதானப் பரிசு 2000 இல் சுப்பிரமுனிய சுவாமிகளுக்கு வழங்கப்பட்டது. இத்தருணம் ஐக்கியநாடுகள் சபையின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற உலகசமாதான மகாநாட்டிலும் குருதேவர் கலந்துகொண்டு உரையாற்றினார்.

குருதேவர் 12.11.2001 திங்கட்கிழமை நள்ளிரவு 11.54 மணிக்கு சித்திரை நட்சத்திரத்தில் ஹவாயில் உள்ள தனது சைவ ஆதீனத்தில் துறவிகள் சூழ்ந்திருக்க மகாசமாதி அடைந்தார். குருதேவரின் திருமேனி தகனம் செய்யப்பட்டு அஸ்தி ஆதீனத்தில் உள்ள சிவநடராஜரின் சன்னிதியின் கீழே ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த குகையில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. மகாசமாதியடையும்போது தனது அடியவர்களிடம் குருதேவர் தான் இந்த உடலைவிட்டு நீங்கினாலும் தினமும் இருபத்துநான்கு மணிநேரமும் அக வுலகிலிருந்து அடியவர்களுக்கு அருள் பாலிப்பேன் என்று கூறினார்.

குருதேவர் ஆரம்பித்த சிவப்பணிகளை ஆதீனத்துத் துறவிகள், தற்போதைய ஆதீன குரு முதல்வர் சற்குரு போதிநாத வேலன் சுவாமிகளின் தலைமையில் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

குருதேவர் சுப்பிரமுனிய சுவாமிகளின் திருவடியின் கீழ் ஹவாய் சைவ ஆதீனத்தில் பன்னிரண்டு ஆண்டுகள் வாழ்ந்தமை எனது வாழ்வில் கிடைத்த பெரும்பேறு. எனது ஆன்மீக வாழ்வை ஆற்றுப்படுத்திய குருதேவர் சுப்பிரமுனிய சுவாமிகள் மகாசமாதியடையும் போது அவரது அருகில் இருந்தமை எனது பூர்வஜென்ம புண்ணியமும், மாதா பிதா குரு தெய்வம் ஆகியோரின் கருணையுமாகும்.

**ரிஷி தொண்டுநாத சுவாமிகள்**

(நி-420)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

## உக்ரைன் மீது அணு ஆயுத தாக்குதல்

### ஒத்திகை நடத்தப்படுமென ரஷ்யா அறிவிப்பு



(கீவ்)

உக்ரைன் மீது அணு ஆயுதத் தாக்குதல் ஒத்திகை நடத்தப்படுமென ரஷ்யா அறிவித்துள்ளமை உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த சிலநாட்களாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், ரஷ்யாவின் இறையாண்மையை காக்க உக்ரைன் மீது அணு ஆயுதத்தை பயன்படுத்தவும் தயங்கமாட்டேன் எனத் தெரிவித்து வந்தார்.

இந் நிலையிலேயே தற்போது "உக்ரைன் மீது அணு ஆயுதத் தாக்குதல் ஒத்திகை நடத்தப்படுமென" ரஷ்ய அரசு அறிவித்துள்ளது.

இதேவேளை அணு ஆயுத தாக்குதல் நடத்தக் கூடாது என ரஷ்யாவுக்கு உலக நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையேயான போர் இரண்டு ஆண்டுகளை கடந்தும் நீடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# சர்வதேச குற்றவி

# சமர்ப்பிக்கப்பட்ட

## அதிருப்தியில் இஸ்ரேல்

(ஜெருசலேம்)

**இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உட்பட ஹமா தலைவர்களை கைது செய்ய பிடியாணை பிறப்பிக்க சர்வதே நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவு குறித்து இஸ்ரே கோபத்தில் இருப்பதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளி**

இத்தீர்மானம் இஸ்ரேலின் ஜனநாயகத்திற்கு கடும் சவாலாக உள்ளதாகவும் இஸ்ரேலும் ஹமாஸும் சமமாக நடத்தப்படுவதே தனது கோபத்திற்கு காரணம் எனவும் இஸ்ரேல் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் ஹமாஸ் அமைப்பை இஸ்ரேலால் சமமாக நடத்த முடியாது என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டு நிறுவ

## நடுவானில் கொந்தளித்த விமானம் பயணி ஒருவர் பலி, 30 பேர் காயம்





(சிங்கப்பூர்)

நடுவானில் கொந்தளித்த சிங்கப்பூர் ஏயார்லைன்ஸ் விமானத்தால் அதன் பயணிகளில் ஒருவர் பலியாகி இருக்கிறார் மேலும் 30 பேர் காயமடைந்துள்ளனர்.

ஆகாயத்தின் பரவசமூட்டும் விமானப் பயணத்தில் அவ்வப்போது விபரீதங்களுடனும் பயணிக்க நேரிடும். அப்படியொரு நிகழ்வாக சிங்கப்பூர் ஏயார் லைன்ஸ் நிறுவனத்தை சேர்ந்த போயிங் ரக விமானம் ஒன்று, நடுவானில் கொந்தளிப்புக்கு ஆளானதில் அதில் பயணித்தவர்கள் செத்துப் பிழைத்திருக்கிறார்கள். இந்த எதிர்பாரா சம்பவத்தில் பயணிகள் பலர் காயமடைய, அவர்களில் ஒருவர் பரிதாபமாக இறந்துள்ளார்.

சிங்கப்பூர் ஏயார் லைன்ஸ் விமானம் ஒன்று லண்டனில் இருந்து சிங்கப்பூர் நோக்கி நேற்று முன் தினம் கிளம்பியது. விமானத்தில் 211 பயணிகளும் 18 பணியாளர்களும் இருந்தனர். ஹீத்ரு விமான நிலையத்திலிருந்து சிங்கப்பூர் நோக்கி பறந்த விமானம், எதிர்பாராத விதமாக நடுவானில் கொந்தளிப்பை சந்தித்தது.

இதனையடுத்து பாங்காக்கின் ஸ்வர்ணபூமி சர்வதேச விமான நிலையத்தில் சிங்கப்பூர் ஏயார்லைன்ஸ் விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டது. காயமடைந்த பயணிகளுக்கான மருத்துவ உதவிகள் வழங்கப்படும்போது, அவர்களில் ஒருவர் மரணமடைந்திருப்பது உறுதி செய்யப்பட்டது. கணிக்க இயலாத காற்று நகர்வுகள் உள்ளிட்ட வளிமண்டல உறுதியற்ற தன்மையால் நேரிடும் நடுவான் கொந்தளிப்புக்கு அவ்வப்போது விமானங்கள் ஆளாவது உண்டு.

ஆனபோதும் சிங்கப்பூர் ஏயார்லைன்ஸ் நிறுவனத்தை சேர்ந்த போயிங் ரக விமானம், நடுவானில் நீடித்த மற்றும் கடுமையான கொந்தளிப்பால் தாக்குண்டது. இதில் விமானத்தின் பயணிகளில் 30 பேர் காயமடைந்தனர். காயமடைந்த பயணிகளில் ஒருவர் இறந்ததை சிங்கப்பூர் ஏயார்லைன்ஸ் விமான நிறுவனமும் உறுதி செய்துள்ளது. (நி-6)

## பிரேசிலில் டெங்கு பாதிப்பு 51 லட்சத்தை தாண்டியுள்ளது

(பிரேசில்)

பிரேசிலில் இதுவரை இல்லாத வகையில் டெங்கு பாதிப்பு அதிகரித்து காணப்படுகிறது என சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் இந்த ஆண்டில் இதுவரை டெங்குவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 51 இலட்சத்தை தாண்டியுள்ளது.

அதன்படி சமீபத்திய தரவுகளின்படி, பிரேசிலில் 51 இலட்சத்து 45 ஆயிரத்து 295 டெங்கு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் இதுவரை டெங்குவால் 2,899 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்ப

மேலு டெங்கு வரும் நி லின் சில களிலும் அதிகமாக யுள்ளது.

காலநி போன்ற டெங்குக் புக்கு கார தார அமை ள்ளது.

## ஹமாஸ் தோற்கடிக்கப்பட வே

### அமெரிக்க ஜனாதிபதி சூளுரை



(வோஷிங்டன்)

காசாவில் நடப்பது இனப்படுகொலை அல்ல என்றும், ஹமாஸ் படையினர் தோற்கடிக்கப்பட வேண்டும் என்றும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் நடைபெற்ற யூத - அமெரிக்க பாரம்பரிய மாத நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே ஜோ பைடன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது காசாவில் ஹமாஸ் படையினருக்கு எதிரான இராணுவ நடவடிக்கையில், இஸ்ரேலியப் படைகள் இனப்படுகொலை செய்யவில்லை. காசாவில் நடப்பது இனப்படுகொலை அல்ல. இனப்படு மேற்கொ த்தை நா கிறோம்.

ஹமா பட்ட நாடு டோபர் 7 தப்பட்ட பேரைக் க்கணக் கைதிகளை றவர்கள் ளிகள். பாதுகாப் க்காவின் இரும்புக் போன்ற தோற்கடி என நா கிறோம். நாங்கள் இணை வோம். தெரிவித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...வியல் நீதிமன்றில்
# ...ட முன்மொழிவு
## ...ல் பிரதமர்

**...மாஸ் அமைப்பின் ...வதேச குற்றவியல் ...ஸ்ரேல் பிரதமர் கடும் ...வெளியிட்டுள்ளன.**



...ாக ...மெ ...டன் ...றுவ ...ப்பட்ட சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் அங்கம் வகிக்காது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

...ிக்கப்பட்டுள்ளது.

மேலும் பிரேசிலில் ...டெங்கு காய்ச்சல் பரவி ...ரும் நிலையில், பிரேசி...ின் சில அண்டை நாடு...ளிலும் டெங்குக் காய்ச்சல் ...அதிகமாக பரவத் தொடங்கி...ள்ளது.

காலநிலை மாற்றம் ...பான்ற காரணிகளே ...டெங்குக் காய்ச்சல் அதிகரிப்...க்கு காரணம் என்று சுகா...ார அமைச்சகம் குறிப்பிட்டு...ள்ளது. (நி-6)

# ...வேண்டும்
## ...நரை

...னைப்படுகொலை நடப்பதாக ...மற்கொள்ளப்படும் பிரசார...தை நாங்கள் நிராகரிக்...றோம்.

ஹமாஸால் பாதிக்கப்...ட்ட நாடு இஸ்ரேல். ஒக்...டோபர் 7 ஆம் திகதி நடத்...ப்பட்ட தாக்குதலில் 1,200 ...பேரைக் கொன்று நூற்று...கணக்கான பணயக் ...கைதிகளைப் பிடித்துச் சென்...வர்கள் ஹமாஸ் போரா...ளிகள். இஸ்ரேலியர்களின் ...பாதுகாப்புக்கான அமெரி...காவின் ஆதரவு என்பது ...இரும்புக் கவசத்தைப் ...போன்றது. ஹமாஸ் ...தோற்கடிக்கப்பட வேண்டும் ...ன நாங்கள் விரும்பு...கிறோம். அதைச் செய்ய ...நாங்கள் இஸ்ரேலுடன் ...இணைந்து செயற்படு...வோம். இவ்வாறு பைடன் ...தெரிவித்துள்ளார். (நி-6)

# ஈரானில் உள்நாட்டு போர் உருவாக வாய்ப்பு
## எச்சரிக்கும் அரசியல் நிபுணர்கள்



(டெஹ்ரான்)

ஈரானில் ஜனாதிபதியின் மரணம் மிக மோசமான உள்நாட்டு போரினை உருவாக்கலாம் என அரசியல் நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி விபத்தில் மரணமடைந்தமை நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது.

தற்போது ஜனாதிபதி ரைசியின் மரணம், அவரது இடத்திற்கான போட்டியை அதிகார மையத்தில் உருவாக்கும் என்றே நிபுணர்கள் தரப்பின் கணிப்பாக உள்ளது.

அப்படி ஒரு நிலை உருவானால், அது நாட்டில் கலவரங்களை உருவாக்கும் என்றும் கூறுகின்றனர். ஈரான் நாட்டை பொறுத்தமட்டில் உண்மையான மொத்த அதிகாரமும் உச்சத் தலைவரின் வசமே உள்ளது, ஜனாதிபதியிடம் அல்ல.

ஆனால் அதிகார பகிர்வு தொடர்பில் மோதல் ஏற்படும் என்றால், ஈரான் மீண்டும் மிக மோசமான நிலைக்கு தள்ளப்பட வாய்ப்பு இருப்பதாக பிரித்தானிய வரலாற்றாசிரியர் Anthony Glees தெரிவித்துள்ளார். (நி-6)

# அசேஞ்ஜ் நாடு கடத்தல் வழக்கு மேல்முறையீடு செய்ய அனுமதி



(கன்பெரா)

விக்கி லீக்ஸின் ஸ்தாபகர் ஜூலியன் அசேஞ்ஜை அமெரிக்காவுக்கு நாடு கடத்துவது தொடர்பான வழக்கை மேல்முறையீடு செய்ய லண்டன் உயர்நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

அவுஸ்திரேலியாவை சேர்ந்த ஜூலியன் அசேஞ்ச் கடந்த 2006 ஆம் ஆண்டு தனது 'விக்கி லீக்ஸ்' இணையதளத்தின் மூலம் பல்வேறு நாடுகளில் போர் குற்றம் மற்றும் ரகசிய ஆவணங்களை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியிருந்தார்.

இதில் அமெரிக்க வெளியுறவு தொடர்பான இரண்டரை லட்சத்துக்கும் அதிகமான ரகசிய ஆவணங்களை வெளியிட்ட வழக்கு லண்டன் உயர்நீதி மன்றத்தில் நடைபெற்று வருகின்றது.

அந்தவகையில் ஜூலியன் அசேஞ்ஜை நாடு கடத்தி கொண்டு வரும் குறித்த வழக்கில் இரு நீதிபதிகள் கொண்ட பெஞ்ச், பிறப்பித்த உத்தரவை எதிர்த்து லண்டன் உயர்நீதிமன்றத்தில் அசேஞ்ச் மேல்முறையீடு செய்தார்.

இந்நிலையில் குறித்த மனுவை லண்டன் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டதாகத் தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# வியட்நாமில் புதிய ஜனாதிபதி

(வியட்நாம்)

வியட்நாமின் உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரியான து லாம், நாட்டின் புதிய ஜனாதிபதியாக விய ட்நாம் பாராளுமன்றத்தால் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

அதன்படி து லாமின் பெயரை அந்நாட்டு கம்யூனிஸ்ட் கட்சி முன்மொழிந்ததையடுத்து, அவருக்கு ஆதரவு அளிக்க ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது

வியட்நாமில் அடிப்படைச் சுதந்திரங்கள் நசுக்கப்பட்டதாக உரிமைக் குழுக்கள் எழுந்த காலத்தில் அவர் பொலிஸ் மற்றும் உளவுத்துறை நடவடிக்கைகளை மேற்பார்வையிட்டார்.

மேலும் 66 வயதான து லாம் அதிபராக நியமனம் செய்யப்பட்டதன் மூலம் இரண்டு மாதங்களாக நிலவி வந்த கடும் அரசியல் குழப்பத்திற்கு முடிவு கிடைக்கும் என அரசியல் விமர்சகர்கள் குறிப்பிட்டுள்ளனர். (நி-6)

# சீன ஆரம்பப் பாடசாலையில் மீண்டும் கத்திக்குத்து சம்பவம்
## இருவர் உயிரிழப்பு, 10 பேர் காயம்

(பீஜிங்)

சீனாவில் ஆரம்பப் பாடசாலையொன்றில் இடம்பெற்ற கத்திக்குத்துச் சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் 10 பேர் காயமடைந்துள்ளனர்.

45 வயது பெண் ஒருவர் பழம்வெட்டும் கத்தியை பயன்படுத்தி தாக்குதலை மேற்கொண்டுள்ளார்.

சீனாவின் ஜியாங்ஜி மாகாணத்தின் வென்பாங் நகரில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கத்திக்குத்து தாக்குதலைத் தொடர்ந்து ஆரம்பப் பாடசாலையிலிருந்து மாணவர்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.

இந்தச் சம்பவம் குறித்து அச்சம் வெளியிட்டுள்ள பெற்றோர்கள் பாடசாலை உரிய தகவல்களை வெளியிடவில்லை என குற்றம் சாட்டியுள்ளனர். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்தினை சீர்செய்யக்கோரி பூநகரியில் மக்கள் கவனயீர்ப்பு

(கண்டாவளை)

**கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட முட்கொம்பன் அரசபுரம் செக்காலை உள்ளிட்ட கிராமங்களுக்கான சீரான போக்குவரத்து வசதியை ஏற்படுத்தித் தருமாறு கோரி நேற்று பிரதேச மக்கள் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தி ருந்தனர்.**



கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அரசபுரம் செக்காலை முட்கொம்பன் கண்ணகைபுரம் உள்ளிட்ட கிராமங்களில் சுமார் 700 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இந்த நிலையில் குறித்த கிராமங்களுக்கான பிரதான போக்குவரத்து பாதையாக அமைந்துள்ள அக்கராயன் முட்கொம்பன் வீதி மற்றும் 10 ஆம் கட்டை முட்கொம்பன் வீதி என்பன நீண்ட காலமாக புனரமைக்கப்படாத நிலையில் குன்றும் குழியுமாக காணப்படுகின்றன.

இவ்வாறு பிரதான போக்குவரத்து பாதைகள் காணப்படுவதனால் குறித்த கிராமங்களுக்கான போக்குவரத்துக்கள் சீராக இடம் பெறுவதில்லை என்றும் அரச பேருந்து ஒன்று மாத்திரமே சேவையில் ஈடுபட்டு வருவதாகவும் குறித்த சேவைக்கு பழைய பேருந்து ஒன்றை அமர்த்துவதனால் அடிக்கடி பேருந்துபழுதடைவதாகவும் சீரான சேவையாக இடம்பெறுவதில்லை எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். குறித்த பேருந்து சேவையை சீரான முறையில் ஏற்படுத்தி தருவதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (நி-6-315)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 160 | 120-170 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 80 | 150 | 100 | 160 |
| தக்காளி | 180 | 280 | 170 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 150 | 130 | 160 |
| கோவா | 200 | 200 | 150 | 200 |
| கரட் | 230 | 220 | 200 | 240 |
| பூசணி | 80 | 100 | 120 | 100 |
| புடோல் | 200 | 150 | 120 | 250 |
| வாழைக்காய் | 100 | 80 | 70-100 | 200 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 200-350 | 350 |
| பெரிய வெங்காயம் | 250 | 220 | 250 | 240 |
| பாகற்காய் | 600 | 600 | 300 | 500 |
| வெண்டக்காய் | 200 | 150 | 200 | 200 |
| கருணைக் கிழங்கு | 140 | 120 | -- | 200 |
| பயற்றங்காய் | 400 | 500 | 500 | 400 |
| லீக்ஸ் | 350 | 300 | 300 | 350 |
| பீற்றூட் | 300 | 600 | 300 | 400 |
| கறிமிளகாய் | 200 | 450 | 250 | 300 |
| முருங்கைக்காய் | 1000 | 1000 | 700-1000 | 1000 |
| போஞ்சி | 600 | 600 | 350 | 550 |
| கத்தரிதம்புள்ள | 100 | 160 | -- | 180 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 40-70 | 120 |
| தேசிக்காய் | 1300 | 1200 | 800-1000 | 1500 |
| தேங்காய் (ஒன்று) | 110 | 80 | 60-110 | 80-120 |
| இராசவள்ளி | 450 | 400 | 250 | 400 |
| வெங்காயப்பூ | 500 | 400 | -- | 480 |
| முள்ளங்கி | 100 | 150 | 80 | 320 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 200 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | -- | 100 | 80 | -- |

## இன்று ஒரு தகவல் 131



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# கண்ணீர்

ஒரு மனிதன் இந்த உலகத்திற்கு வந்து சேர்ந்த உடனே அவன் செய்கின்ற முதற் காரியம் அழுகை தான். ஒரு குழுந்தை பிறந்த உடனேயே அது ஆணா பெண்ணா கறுப்பா சிவப்பா என்று பார்ப்பதறக்கு முன்பு குழந்தை அழுகிறதா இல்லையா என்று பார்ப்பது மிகவும் முக்கியம். பிறக்கும் போது அவன் அழவேண்டும். போகும் போது மற்றவர்களை அழ வைக்க வேண்டும் இது தான் நல்ல மனிதன்! வாழ்வாங்கு வாழ்வது என்றால் என்ன? இதுதான்.

ஒருவன் மூச்சை விட்டவுடனே... 'அப்பாடா போய்ச் சேர்ந்துட்டானா' என்று எல்லோரும் நிம்மதியா மூச்சு விடுகிறார்கள் என்றால் அவன் நல்ல மனிதன் கிடையாது. அழுவதனாலே என்னென்ன நல்லது என்று பார்க்கலாம். அழுவதனால் நல்லதா? ஆம்! உலக சுகாதார நிறுவனம் இருக்கிறதல்லவா WHO அதுதான் World Health Organization...! அதில் இருக்கின்ற சில மருத்துவர்கள் என்ன கூறுகிறார்கள் தெரியுமா?

அழுகை என்பது உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கு ஒரு வழி. ஒரு வடிகால். கண்ணீர் எப்போது வரும்? மிக ஆனந்தத்தில் இருக்கும் போது வரும். அதிக துயரத்திலே இருக்கும் போது வரும். எல்லோருக்கும் துன்பம் வருவது இயற்கை தான். சில சமயம் தாங்க முடியாத துன்பத்தை அனுபவிக்க வேண்டியிருக்கும். ஆழ்ந்த துன்பத்திலே இருக்கும் போது கண்ணீரை அடக்கி வைத்தால் அது நமது உடலிலே கெடுதலை உண்டாக்குமாம். வைத்தியர் எரிக்லிண்டர்மேன் என்று ஒருவர் இருந்தார். இவர் ஒரு மனநோய் நிபுணர். அமெரிக்காவிலே இருக்கின்ற ஒரு பொது வைத்தியசாலையிலே பணி புரிகின்றார். அவர் ஒரு உதாரணம் கூறுகின்றார். ஒரு தாதி இளம் வயது. அந்த தாதியினுடைய அப்பாவிற்கு ஒரு தீராத நோய். அவரை வைத்தியசாலையிலே சேர்த்திருந்தார்கள். அவருடைய பெண்ணே அங்கே தாதியாக இருந்ததால் பக்கத்திலே இருந்து கவனித்துக் கொண்டு வந்தாளாம். திடீரென்று அவர் இறந்து போய்விட்டாராம். இந்தப் பெண்ணிற்கு மிகவும் வருத்தம். என்ன இருந்தாளும் அப்பா இல்லையா! ஆனால் அவள் தாதியாகவே இருந்து பழக்கப்பட்டதனால் அவளுடைய துக்கத்தை வெளியிலே காட்டாமல் மனதிற்குள்ளே போட்டு அடக்கி வைத்திருந்தாளாம். இறுதியிலே என்ன நடந்தது தெரியுமா? அவளுடைய அப்பா இறந்து நான்கு மணி நேரத்திற்குள்ளே இவளுக்கு வயிற்று உபாதைகள் உண்டாகிவிட்டது. சிறிது நாட்களிலே பாவம் அந்தப் பெண்ணும் இறந்து போய்விட்டாள்.

நமது ஊரில் கூலிக்கு மாரடிப்பது என்று ஒரு பழமொழி உண்டு. கேள்விப்பட்டிடுக்கிறீர்களா? சில இடத்திலே யாராவது இறந்து போனால் அதற்கு ஒப்பாரி வைப்பதற்கு காசு கொடுத்து ஆட்களை அழைத்துக் கொண்டு வரும் வழக்கம் உண்டு. அதற்கென்றே சிலர் இருக்கின்றார்கள். இதை எதற்கு செய்கின்றார்கள் என்று நினைக்கின்றீர்கள்? இறந்து போனவர்களுக்கு நெருங்கிய உறவினர்கள் இருப்பார்கள். அவர்கள் துக்கத்தை அடக்கி வைத்திருப்பார்கள். அப்படி யாராவது இருந்தால் இந்த ஒப்பாரிகாரர்களை பார்த்ததும் அவர்களும் அழுவார்கள். பாரமும் குறைந்து விடும். இது தான் விடயம்.

கண்ணீரை அடக்கி வைத்தால் என்னென்ன பிரச்சினைகள் வரும் என்று கண்டுபிடித்து கூறியிருக்கிறார்கள். ஆஸ்துமா, ஒற்றைத் தலைவலி போன்றன வரலாமாம். அதனாலே கண்ணீரைப் பற்றி ஆராய்ச்சி எல்லாம் செய்திருக்கின்றார்கள். அமெரிக்காவிலே நியூ ஆர்லியன்ஸ் இல் ஒரு மருத்துவக் கல்லூரி ஒன்று உள்ளது. அங்கே பீட்டர் கேஸல் என்று ஒருவர் கண்ணீர் பற்றி ஆராய்ச்சி செய்தார். இதற்காக Tear Analysis Laboratory ஒன்று அங்கே உள்ளது. அதாவது கண்ணீர் பரிசோதனை நிலையம். இரத்த பரிசோதனை மாதிரி கண்ணீர் பரிசோதனை நிலையம். கண்ணீரை பரிசோதனை செய்து பார்த்தால் பலவிதமான உடற்கோளாறுகளை கண்டுபிடித்துக் கொள்ளலாமாம். இதிலே என்ன கடினம் என்றால் உண்மையாக ஒருவரை அழ வைத்து அந்த சமயம் வரும் கண்ணீரை சேகரிக்க வேண்டும். சாதாரணமாக வரும் கண்ணீர் Basal tears உண்மையான அழுகையில் வரும் கண்ணீர் Reflex tears. இது இரண்டும் கலந்தால் கண்ணீருடைய கலவை மாறிவிடும். அதனால் சரியான தீர்வு கிடைப்பது கடினமாகிவிடும்.

உதாரணத்திற்கு கண்ணீரை சோதித்து பார்க்க ஒருவர் வருகிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். உடனே பளார் என்று அவருக்கு ஒரு அறை கொடுக்க வேண்டும். வலி தாங்காமல் அவர் அழுவார். அப்போது வரும் கண்ணீரை சேகரிக்க வேண்டும். அது தான் உண்மையான கண்ணீர். அல்லது கட்டணம் எவ்வளவு என்று கூறி பற்றுச்சீட்டை முதலிலேயே கையில் கொடுக்க வேண்டும். உடனே கண்ணீர் எடுக்கலாம்.

Lucy freeman என்று ஒரு அம்மா fight against tears என்று ஒரு புத்தகம் எழுதியிருந்தார். அவர்களுக்கு கடுமையான ஜலதோஷம் இருந்ததாம். Sinus trouble வேற இருந்ததாம். அந்த அம்மா உணர்ச்சிகளை அடக்கி வைக்காமல் கத்திக்கத்தியே அது இரண்டு கோளாறையும் சரி செய்து விட்டார்களாம்!

சர்வதேச மருத்துவர் குழு ஒன்று என்ன சொல்கிறது தெரியுமா?

Tension குறைய வேண்டும் என்றால் எல்லாரும் சேர்ந்து அழவேண்டும் என்று சொல்கிறது! Hyper tension, Peptic ulcer இதுலாம் கூட வைத்திய சாலைகளில் கூட அழுவதுக்கு என்று பயிற்சி கொடுக்க தனிப் பிரிவே வரலாம் என்று சொல்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பலரது கவனத்தை கவர்ந்த வினோத பறவை

(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்ட செலயகத்தின் வெளிப்புறச் சூழலிற்கு நேற்று முன்தினம் வருகை தந்த வினோதப் பறவை பலரது கவனத்தை ஈர்த்துள்ளது. மேலும் அதன் புகைப் படம் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6-100)





**காரைநகர் குறிஞ்சாக்குளி ஸ்ரீமுத்துமாரி அம்மன் பொற்பதங்கள் பிடிப்போம் இன்று இரததோற்சவம் வடம் பிடிப்போம், அபிராமி அந்தாதியும், திருமுறைகளும் திருப்புகழும் பாடி ஓதி அருள் மிகு அம்பாள் பாதமலர் வணங்கி நற்கதி பெறுவோம்.**



வாணுதல் கன்னியை, விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற்கு எண்ணிய எம்பெருமாட்டியை, பேதை நெஞ்சில்
காணுதற்கு அண்ணியள் அல்லாத கன்னியை, காணும் அன்பு
பூணுதற்கு எண்ணிய எண்ணம் அன்றோ முன்செய் புண்ணியமே

அந்தாதி -40

**"விண்ணவர் யாவரும் வந்து இறைஞ்சிப் பேணுவதற்கு எண்ணிய பெருமாட்டி"** வானோர் அனைவரும் வந்து வணங்கி போற்றி **இது வேறு சமயங்களில் இல்லாத நினைக்கும் சிறப்பையுடையது** எமது பெருமைக்கு உரிய தலைவியானவள் அன்னையின் வழியாக அப்பனை அணுகினால் எம் பெருமான் அருள் எளிதில் கிடைக்கும். **"பேதை நெஞ்சில் காணுதற்கு அண்ணியவள் அல்லாத கன்னி"** ஈசனை அறியாமை, அஞ்ஞானம் உடையவர் நெஞ்சில் நிற்கமாட்டான் என்பதனை லலிதா சகஸ்ரநாமம் **"துஷ்ட தூரா"** என துஷ்டர்களுக்கு எட்டாமல் நிற்பவன்.

**"காணுமன்பு பூணுதற்கு எண்ணிய எண்ணமன்றோ முன்செய் புண்ணியமே"** நல்ல எண்ணமே நற்செயல்களுக்கு காரணமாகிறது. நற்செயல்களே புண்ணியமாகிறது. புண்ணியத்தால் அடையத்தக்கவள் எனும் பொருளில் சகஸ்ரநாமம் **"புண்ணிய லப்யா"** என்கிறது. இப்படிப்பட்டவளை நான் அண்டிக்கொண்டு வணங்க எண்ணினேன். இதுவே நான் முற்பிறவிகளில் செய்த புண்ணியமாகும். நெஞ்சத்தில் பேதமை நீங்குதல் இப்பாடலின் பாராயண பலன் ஆகும்.

இவ்வாறு நூறு பாட்டை உடைய அந்தாதியும் தரக்கூடிய அருள்செல்வம் ஆகும். இப்பாடல்களை வாய்விட்டுப் படித்தாலும் மனத்துள் படித்தாலும், இம்மறைமொழிச் சொற்கள் தமக்குரிய இறை அதிர்வுகளை படிப்பவர் மனத்தில் உண்டாகும்.

நாம் ஆலயத்திலும், வீட்டிலும் காலை, மாலை நேரத்தை ஒதுக்கி திருமுறை பாராயணம் பாடி ஓதி நமது சந்ததிக்கும் வழிகாட்டுவோம்.



முத்துமாரி அம்மா நின்பொற்பாதங்கள் பிடித்தேன்
நற்கதி அருள்வாய் அம்மா
க.கு.க.சிவபாலன். K.K.K

# வீதிக்கு வந்த காட்டு யானையால் தடைப்பட்ட போக்குவரத்துக்கள்



(மன்னார்)

மன்னார்-மதவாச்சி பிரதான வீதி,முருங்கன் பகுதியில் காட்டு யானை ஒன்று நேற்று காலை திடீரென வீதிக்கு வந்தமையினால் குறித்த வீதியூடான போக்குவரத்து சிறிது நேரம் பாதிக்கப்பட்டிருந்தது.

முருங்கன் பண்ணையின் பின் பகுதியூடாக வந்த குறித்த யானை பண்ணையின் சுற்று வேலியை உடைத்துக்கொண்டு மன்னார்-முருகன் பிரதான வீதிக்கு வந்து சிறிது நேரத்தின் பின்னர் வீதியைக்கடந்தது. இதனால் குறித்த வீதியூடான போக்குவரத்து சிறிது நேரம் பாதிக்கப்பட்டிருந்ததுடன், குறித்த யானை காட்டுப் பகுதிக்குள் சென்றுள்ளது.

இந்நிலையில், கடந்த சில நாட்களாக மன்னார் மதவாச்சி பிரதான வீதியில் இரவு பகல் வேளைகளில் காட்டு யானையின் திடீர் நடமாட்டம் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-285)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3123

**காரத்திகா**

10 வருஷம் முன்னாடி
- எல்லோர் வீட்டு TV. மேலேயும்...



இது மாதிரி ஒரு போட்டோ
இருக்கும்ல்ல...

**மிதுளா**

குருப்லாம் எப்படி போயிட்டு இருக்கு?



லைக் பண்ணவும் ஆளு இல்லை கமெண்ட் பண்ணவும்
ஆளு இல்லாம நாசமா போயிட்டு இருக்கு.

**தனுஷியா**



இரண்டு சீப்பு பழம் வாங்கிட்டு வர சொன்னது
ஒரு குத்தமாடா...!

**சபரிஷா**

ஒரு பெண் எந்த எதிர்ப்பும் இல்லாமல் ஒரு ஆண்
சொல்வதைக் கேட்டு அமைதியாக நிற்கிறாள் என்றால்



நிச்சியம் அந்த ஆண் போட்டோகிராப்பராகத்
தான்இருக்க வேண்டும்

**கண்ணா**

போதை பொருட்கள் பட்டியல்ல செல்.்.போனையும்
சேர்க்கணும்...
ஒரு மணி நேரம் பார்க்கலைன்னா கை
காலெல்லாம் நடுங்குது...!!



**தினேஸ்**

வாழ்க்கையில தொடர்ந்து பிரச்சினையா வருதேன்னு
கலங்கி நிற்கக் கூடாது...



வடிவேலு சொல்வது போல் அது போன மாசம்..
இது இந்த மாசம்னு போய்கிட்டே இருக்கனும்...!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 488





றுப்புறமெங்கும் உற்றுப் பார்த்தன. அவருடைய உள்ளம் எப்படித் தத்தளித்துக் கொண்டிருந்தது என்பதைச் சொல்லி முடியாது. தன் அருமைத் தமக்கை அனுப்பிய தூதன் முரட்டு அராபியர்களிடமும், கொலைகார மந்திரவாதிகளிடமும் அகப்பட்டுக் கொண்டிருக்கிறான். அது போதாது என்று இந்தச் சுழிக்காற்று வேறு வந்து சேர்ந்தது. ஒரு வேளை அவ்வீர வாலிபன் ஏறியுள்ள கப்பலைக் கண்டு பிடிக்க முடியாமலே போய் விடுமோ? கண்டுபிடித்தாலும், அவனை உயிரோடு காண்பது சாத்தியமா? கலபதி அஞ்சுவதுபோல் அவன் ஏறியிருக்கும் கப்பல் மேல் நம் கப்பல் மோதி இரண்டும் கடலில் மூழ்கினால் வேடிக்கையாகத்·தானிருக்கும்! ஆனால் தந்தையிடம் சொல்ல வேண்டிய செய்தியைச் சொல்லுவது யார்? பார்த்திபேந்திரனிடம் அந்தக் குடும்ப இரகசியத்தைக் கூறுவது இயலாத காரியம். கூறினால் அந்தப் பல்லவனுக்கு அது கேலியாயிருக்கும் அதன் முக்கியத்துவத்தை அவன் உணரமாட்டான். இதுகாறும் இளவரசர் செய்ய எண்ணிய காரியம் எதிலும் தோல்வியடைந்ததில்லை. இப்போது தோல்வி ஏற்பட்டுவிடுமோ? இல்லை, ஒருநாளும் இல்லை. பொன்னியின் செல்வனுக்குத் தீங்கு நேருவதையோ, தோல்வி ஏற்படுவதையோ சமுத்திர ராஜன் பார்த்துக் கொண்டிருக்கமாட்டான்!

கப்பலில் உள்ளவர்களின் கதி அதோகதி தான்! "ஆகவே சுழிக்காற்றின் அபாயத்தைக் காட்டிலும் சுற்றிலும் ஒன்றும் பார்க்க முடியாமலிருப்பதுதான் அதிக அபாயம்" என்று அம்மரக்கலத் தலைவன் கூறினான்.

இது இளவரசருக்குத் தெரிந்த விடயந்தான். ஆகவே அவர் அத்தனைக் காற்றிலும் மழையிலும் கப்பலின் ஓரமாக நின்று கொண்டு தன் கூரிய கண்களின் பார்வையை நாலாபுறமும் செலுத்திக் கொண்டிருந்தார். மின்னல் மின்னிய போதெல்லாம் அவருடைய கண்கள் அதிவேகமாகச் சுழன்று சுற்

இருளையும் மழையையும் கிழித்துக்கொண்டு எல்லாத் திசைகளையும் பார்த்துக் கொண்டிருந்த இளவரசரும் அந்தப் பேரிடி முழக்கத்தைக் கேட்டார். அப்போது மின்னிய மின்னலுக்கு அவரும் கண்களைச் சிறிது மூடிக்கொள்ள வேண்டியதாயிற்று. கண்ணைத் திறந்து பார்த்தபோது மின்னல் வெளிச்சமில்லாத வேறொரு வெளிச்சத்தைக் கண்டார். சற்றுத் தூரத்தில் ஒரு கப்பல் விரித்த பாய் மரங்களுடன் பேயாடுவது போல் ஆடிக்கொண்டிருந்தது! அதன் பாய்மரத்தின் உச்சியில் தீப் பற்றி எரிந்தது! அந்தத் தீயின் வெளிச்சத்தில் இளவரசர் அதில் ஒரு மனிதன் பாய்மரத்தோடு சேர்த்து நிற்பதைக் கண்டார்! கடவுளே! இத்தகைய அற்புதமும் நடக்கக் கூடுமா? அவன் அந்த வீர இளைஞனாகிய வந்தியத்தேவன்தான்! அவன் மட்டும் ஏன் தனியாக நிற்கிறான்? மற்றவர்கள் என்ன ஆனார்கள்? அதைப் பற்றியெல்லாம் யோசிப்பதற்கு இப்போது நேரமில்லை. செய்யவேண்டியது இன்னதென்பதை ஒரு நொடிப் பொழுதில் இளவரசர் தீர்மானித்துக் கொண்டார்.

அவர் பார்த்த காட்சியைக் கப்பலில் இருந்த மற்றவர்கள் பலரும் பார்த்தார்கள். "அதோ!" என்று அவர்கள் ஏககாலத்தில் எழுப்பிய பெரிய கூச்சல் காற்றின் பயங்கரச் சப்தத்தையும் மீறிக் கொண்டு எழுந்தது. கப்பலோடு சேர்த்துக் கட்டியிருந்த படகண்டை போய் இளவரசர் நின்று கொண்டு, அருகில் நின்ற மாலுமிகளைப் பார்த்து, "உங்களில் யார் என்னுடன் வருவீர்கள்?" என்று உரத்த குரலில் கேட்டார். அவர் செய்ய உத்தேசித்த காரியம் இன்னதென்று ஊகித்தறிந்து மாலுமிகள் திகைத்தார்கள். ஆயினும் பலர் போட்டியிட்டு முன்வந்தார்கள். பார்த்திபேந்திரனும், கலபதியும் வந்து தடுக்கப் பார்த்தார்கள்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## பிரம்மராட்சஷன்



(நேற்றைய தொடர்ச்சி..)

குளத்து நீர் எவரும் பருகப்படாமல் பாசி படிந்து அதில் அல்லி, தாமரைப் பூக்கள் பூக்க ஆரம்பித்தன.

அந்த ஆலமரத்தின் அருகில் சற்று தள்ளி ஒரு கிராமம் இருந்தது. அதன் பெயர் சிங்கப்பட்டி. அக்கிராமத்தில் ராமாயி என்ற பாட்டி இருந்தாள். அறுபது வயது இருக்கும். அவளுக்கு ஒரு பெண் இருந்தாள். அவள் பெயர் வசந்தா. அவளுக்கு திருமணம் ஆகி ஒரு அழகிய ஆண் குழந்தை பிறந்தது.

அவன் பெயர் சுடலை. அவனுக்கு ஆறு வயது நடந்து கொண்டிருக்கும் போது அவன் அம்மாவும், அப்பாவும் சென்ற படகு ஆற்றில் கவிழவே இருவரும் இறந்து போயினர். பேரனை வளர்க்கிற பொறுப்பு பாட்டியை சேர்ந்தது.

குழந்தை பிற்காலத்தில் பேரறிஞனாகவும், கவிஞனாகவும் வருவான் என்பது அவன் படிப்பில் காட்டிய ஆர்வமும் கேட்கத் தொடங்கிய கேள்விகளுமே தெள்ளத் தெளிவாகக் காட்டின.

எதையும் ஏன், எதற்கு என்று அவன் கேட்கத் தொடங்கி தன் அறிவை வளர்த்துக் கொள்வதில் அக்கறை காட்டினான். தன் பேரன் புத்திசாலியாக இருப்பதை அறிந்து பாட்டி மகிழ்ந்தாள்.

அப்படி ஒரு முறை அருகில் உள்ள ஊரில் நடந்த ஒரு திருவிழாவிற்கு பேரனை அழைத்துச் சென்றாள் பாட்டி. அப்படி போகும் போது பிரம்மராட்சஷன் வாழும் ஆலமரத்தை ஒட்டிய சாலை வழியாக அவர்கள் செல்ல வேண்டி வந்தது.

அந்த ஆலமரத்தில் வாழும் பிரம்ம ராட்சஷனைப் பற்றி பாட்டி நன்கு அறிந்திருந்தால் பேரனை ஆலமரத்தை விட்டு ஒதுக்கி அழைத்துச் சென்றாள்.

பெரியதும் நிழல் கொடுக்கக்கூடியதுமான ஆலமரத்தடியில் சிறிது நேரம் விளையாடி விட்டு பிறகு குளத்தின் குளிர்ந்த நீரையும் பருகிவிட்டுச் செல்ல விரும்பினான் சிறுவன்.

"சுடலை! ஆலமரத்தில் வாழும் பிரம்மராட்சஷன் பொல்லாதது... அது ஆலமர நிழலில் தங்குகிறவர்களிடம் மூன்று கேள்விகள் கேட்கும். அந்த கேள்விகளுக்கு சரியான பதிலை கூறாவிட்டால் அவர்கள் தலையை கொய்து ஆலமரத்தடியில் கட்டித் தொங்கவிட்டு விடும். அதனால் இப்போது ஆலமரத்து அருகே செல்லவே அஞ்சுகின்றனர். வா நாம் போய் விடலாம்!" என்றாள் பாட்டி.

"பாட்டி! அப்படி என்ன மூன்று கேள்விகளை கேட்கிறது அந்த பிரம்மராட்சஷன்? அதற்கு இவர்கள் என்ன பதில் சொன்னார்கள்?" என்று கேட்டான்.

"முதல் கேள்வியாக உலகில் எது பெரியது?" என்று கேட்கும்."

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது காரியத்தின் மீது அன்பும், பிறரது விசேஷ பாகத்தின் மீது நம்பிக்கையும் இருந்தால் ஒத்துழைப்பு தானாக வரும். – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சந்தர்ப்பங்களைத் தவறவிட்ட சரித்திரத்தின் சொந்தக்காரர் நாம்

உலகக் கோடீஸ்வரரான பில்கேட்ஸ், முயற்சியில் ஈடுபடக்கூடிய ஓர் இளைஞரிடம் வெற்றுக் காசோலையைக் கொடுத்து உனக்கு வேண்டிய தொகையை எழுதி எடுத்துக் கொள் என்கிறார்.

எனினும் அந்த இளைஞர் அந்தக் காசோலையைப் பெற்றுக் கொள்ள மறுத்துவிடுகிறார்.

அந்த இடத்தில் பில்கேட்ஸ் கூறுகிறார்; நானாக இருந்தால், அந்தக் காசோலையைப் பெற்றுக் கொண்டிருப்பேன். கிடைத்த சந்தர்ப்பத்தை – கிடைத்த வாய்ப்பை நான் ஒருபோதும் தவறவிடுவதில்லை.

அவ்வாறு தவறவிட்டால், அந்தச் சந்தர்ப்பம் மீண்டும் நமக்குக் கிடைக்க மாட்டா.

பில்கேட்ஸ் கூறிய அந்தத் தத்துவத்தை ஈழத் தமிழர்களாகிய நாம் பல சந்தர்ப்பங்களில் பயன்படுத்தத் தவறியிருக்கிறோம்.

ஆம், சேர் பொன்.இராமநாதன் முதல் விடுதலைப் புலிகள் வரை கிடைத்த சந்தர்ப்பங்களைத் தவறவிட்ட வரலாறுகள் நம்மிடம் மிகப்பெரிய அனுபவமாக உள்ளது.

தவிர, எங்கள் ஈழத் தமிழினத்தின் கடந்த கால வரலாற்றை நாம் கற்றுக் கொள்ளத் தவறுவோமாயின், அஃது மிகப்பெரும் வரலாற்றுத் தவறுகளை நாம் திரும்பத் திரும்ப இழைப்பதற்கு வழிவகுக்கும்.

ஆகையால் எமது வரலாற்றை, எமது சரித்திரத்தை நாம் கற்றறிய வேண்டும்.

எமது இனத்தின் அனுபவம் என்பது வரலாறாகக் கிடக்கிறது.

எனவே அதிலிருந்து எமது தவறுகள் நிவர்த்திக்கப்பட வேண்டும்.

உண்மை. வன்னி பெருநிலப்பரப்பில் நடந்த யுத்தம் முடிவுற்ற பின்னர் எமக்கு ஏற்பட்ட இழப்புகள் எமது உரிமையை வென்றெடுப்பதற்கான மிகப்பெரும் பலமாக இருந்தது.

எனினும் அந்தப் பலத்தை பயன்படுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் தவறிவிட்டார்.

அந்தத் தவறை தவறு என்று கூறமுடியுமா? என்ற கேள்வியும் உண்டு.

அதாவது போரில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டபோது, அந்த இழப்பு தமிழ் மக்களுக்கு ஆபத்தானது போல காட்டிக் கொண்ட இரா.சம்பந்தர், கிடைத்த சந்தர்ப்பத்தை தமிழ் மக்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தாமல் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார்.

அவரின் அந்த சுய அரசியல் இலாபத்துக்கு கூட்டமைப்பில் இருந்த ஏனைய முக்கியஸ்தர்களும் உதவி புரிந்தனர் என்பதுதான் உண்மையான வரலாறு.

இவ்வாறு சம்பந்தர் நடந்து கொண்டதன் காரணமாக, ஐ.நா மனித உரிமைகள் பேரவை இலங்கை அரசாங்கத்துக்கு விதித்த நிபந்தனைகள் நீத்துப் போயின.

ஆம், பேரவையின் நிபந்தனைகளை நிறைவேற்ற இலங்கை அரசாங்கத்துக்குக் கால அவகாசம் வழங்க வேண்டுமென சம்பந்தர் கேட்குமளவில் அன்றைய ஆட்சியாளர்கள் சம்பந்தரைச் சிக்கனப் பிடித்துக் கொண்டனர்.

இதனால் எம் இனம் மிகப்பெரும் அவலத்தை எதிர்கொண்டது என்பதுதான் நிதர்சனமான உண்மை.

இப்போது மீண்டுமொரு சர்வதேச வாய்ப்பு நமக்குக் கிடைக்கிறது. அதையேனும் நாம் மிக நிதானமாகப் பயன்படுத்திக் கொள்வோமாக.

# குடிவரவு, குடியகல்வு திணைக்களம் மீது நடவடிக்கை எடுக்குக

## ஹர்ஷ டிசில்வா கோரிக்கை

(கொழும்பு)

விசா விவகாரம் தொடர்பாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் குடிவரவு, குடியகல்வு திணைக்களம் மீது உரிய நடவடிக்கைளை முன்னெடுக்குமாறு அரசாங்க நிதி தொடர்பான குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, நிலையியற் கட்டளையின் 121 ஆவது பிரிவுக்கு அமைய அரசாங்க நிதி தொடர்பான குழுவுக்கு அரச நிறுவனங்களை அழைத்து விசாரணைகளை முன்னெடுக்கிறோம்.

வி.எப்.எஸ் நிறுவனத்துக்கு விசா விநியோக சேவை வழங்கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள சர்ச்சை குறித்து விளக்கம் கோருவதற்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தை அரசாங்க நிதி தொடர்பான குழுவுக்கு 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுத்திருந்தோம்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பியு.குணதிலக,அமைச்சின் மேலதிக செயலாளர் கருணாரத்ன, பிரதான நிதி அதிகாரி பதிரன மற்றும் சட்ட அதிகாரி உப சிறி உட்பட நால்வரையும், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுப்பிட்டிய, மேலதிக கட்டுப்பாட்டாளர் இமால் குணவர்தன, நிதி முகாமைத்துவ அதிகாரி பி.ஜயசிங்க ஆகியோரை குழுவுக்கு முன்னிலையாகுமாறு அழைத்திருந்தோம்.

ஆனால் குழுவில் முன்னிலையாக முடியாது என்று குறுஞ்செய்தி அனுப்பி வைத்துள்ளார்கள். பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் விருப்பத்துக்கு அமைவாகவே திகதி ஒதுக்கப்பட்டது. ஆகவே குழுவுக்கு முன்னிலையாகுமாறு அறிவித்திருந்தேன்.

நிதி தொடர்பில் பாரிய பிரச்சினை எழுந்துள்ள நிலையில் அது குறித்து குழுவுக்கு முன்னிலையாகுமாறு அழைப்பு விடுத்தால் இந்நிறுவனங்கள் கட்டாயம் குழுவில் முன்னிலையாக வேண்டும். ஆனால் இவர்கள் முன்னிலையாகவில்லை இவ்வாறு ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார். (ம-7,10)

# மின்கட்டணத்தை குறைக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை

(கொழும்பு)

மழை காரணமாக மின் உற்பத்தி அதிகரித்துள்ள நிலையில் மின் கட்டணத்தை குறைக்குமாறு எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர்,

தொடர்ச்சியாக பெய்து வரும் பலத்த மழை காரணமாக நீர்மின் நிலையங்களுக்கு அருகிலுள்ள நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் அதிகரித்துள்ளது.

காசல்ரீ மற்றும் மவுஸ்ஸாக்கலை, விக்டோரியா, ரன்தெனிகல மற்றும் சமனல வெவ ஆகிய நீர்த்தேக்கங்களில் நீர் மட்டங்கள் அதிகரித்துள்ளன.

இவ்வாறான நிலையில், மின்சார அலகொன்றின் விலையை குறைப்பதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு 2 தடவைகள், மின்சார சபையிடம் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு கோரியுள்ளது.

என்றாலும் அந்த முன்மொழிவுகள் இதுவரையில் சமர்ப்பிக்கப்படவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

15-20 சதவீதமாக இருந்த நீர்மின் உற்பத்தி மட்டம் இந்த மாதம் 20 ஆம் திகதி 31 சதவீதமாக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவும் இலங்கை மின்சார சபையும் ஒன்றிணைந்து இந்த நன்மையை மின்சார பாவனையாளர்களுக்கு வழங்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்தார். (ம-7,10)

# ஜனாதிபதித் தேர்தலில் ரணில் களமிறங்கினால் ஆதரவு

## இராஜாங்க அமைச்சர் பியல்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பொதுவேட்பாளராக களமிறக்க தீர்மானித்தால் அதற்கு முழுமையான ஆதரவு வழங்குவோம்.எமது வேட்பாளரை இன்னும் இரு வாரங்களில் அறிவிப்போம் என கடற்றொழில் வளங்கள் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா தெரிவித்தார்.

கடற்றொழில் வளங்கள் அமைச்சின் காரியாலயத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் விசேட கவனம் செலுத்தியுள்ளோம். ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான பரந்துப்பட்ட அரசியல் கூட்டணி அமைப்பதற்கு சகல தரப்பினருடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம். கூட்டணி தொடர்பில் வெகுவிரைவில் உறுதியான தீர்மானம் எடுக்கப்படும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பொது வேட்பாளராக களமிறக்க கட்சி மட்டத்தில் தீர்மானம் எடுத்தால் அதற்கு முழுமையாக ஆதரவு வழங்குவோம்.யாரை வேட்பாளராக அறிவிப்பது என்பது தொடர்பில் விரிவான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எமது ஜனாதிபதி வேட்பாளரை இன்னும் இரு வாரங்களில் அறிவிப்போம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பொது வேட்பாளராக கட்சி அறிவிக்குமாயின் அதனை முழுமையாக வரவேற்போம்.ஏனெனில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நெருக்கடியான சூழ்நிலையில் அரசாங்கத்தை பொறுபேற்றார்.

2022 ஆம் ஆண்டு அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்த போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச,மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் அரசாங்கத்தை பொறுப்பேற்கவில்லை.ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனிமனிதராக அரசாங்கத்தைப் பொறுப்பேற்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நிர்வாகத்தினால் குறுகிய காலத்தில் நாடு வழமைக்கு திரும்பியுள்ளது.ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தை மீண்டும் தோற்றுவிப்பதற்கு பொதுஜன பெரமுன தீர்மானித்தால் அதற்கு நிபந்தனையற்ற வகையில் ஒத்துழைப்பு வழங்குவோம் என்றார். (ம-7,10)

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுடப்வியல் கல்லூரியில் 2024 ஆம் ஆண்டிற்கான பின் வரும் ஆறு மாத குறுங்கால சான்றிதழ் தர கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மின்னியலாளர், மோட்டார் சைக்கிள் ஸ்கூட்டர் பழுது பார்த்தல், ஆடை தைத்தல் தொழில்நுட்பம், அலுமினியம் பொருத்துனர், கணிய அளவை உதவியாளர், வெல்டிங் தொழில்நுட்பம், கணிணி வலையமைப்புக்கான சான்றிதழ் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர் ஆகிய கற்கை நெறிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன.

பயில விரும்புவோர் எதிர்வரும் 15.06.2024 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் தொழில்நுட்பவியல் கல்லூரி யாழப்பாணம் என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்குமாறும் மேலதிக விபரங்களுக்கு நேரடியாக தொழில்நுட்பவியல் கல்லூரியின் தொழில் வழிகாட்டல் நிலையத்துடன் அல்லது 021222 0028, 021221 2358 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்பு கொள்ள முடியும்.

மேலும் உள்நாட்டு, வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை உடைய பயிற்சி கட்டணங்களுடன் விசேட குறுங்கால ஆங்கில சான்றிதழ் தர கற்கை நெறி மற்றும் பராமரிப்பாளர் சான்றிதழ் தர கற்கை நெறிகளும் ஆரம்பமாக உள்ளது.

பயில விரும்புவோர் உடனடியாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள் என யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியின் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் உள்ள ஈரான் தூதரகத்திற்கு ஜனாதிபதி ரணில் விஜயம்



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று புதன்கிழமை கொழும்பில் உள்ள ஈரான் தூதரகத்திற்கு விஜயம் செய்து ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் திடீர் மரணம் குறித்து இரங்கல் தெரிவித்துள்ளார்.

தூதரகத்திற்கு வருகை தந்த ஜனாதிபதியை இலங்கைக்கான ஈரான் தூதுவர் அலிரெசா டெல்கோஷ் மற்றும் பணியாளர்கள் வரவேற்றனர்.

அதன் பின்னர், ஜனாதிபதி அவர்கள் ஈரான் தூதுவர் மற்றும் அதிகாரிகளுடன் ஒரு குறுகிய உரையாடலில் ஈடுபட்டிருந்தார்.

பின்பு அங்கு வைக்கப்பட்டிருந்த இரங்கல் குறிப்பேட்டில், ஈரான் அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் தனது ஆழ்ந்த இரங்கலைத் பதிவு செய்திருந்தார். (நி-6)

# வெசாக்கை முன்னிட்டு பொருட்கள் சிலவற்றின் விலைகள் குறைப்பு

## சதொச தெரிவிப்பு

(கொழும்பு)

வெசாக் பண்டிகையை முன்னிட்டு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் சிலவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக லங்கா சதொச நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த விலைக் குறைப்பானது நேற்று புதன்கிழமை முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, ஒரு கிலோ நெத்தலி கருவாடு 950 ரூபாவாகவும், ஒரு கிலோ இந்தியப் பெரிய வெங்காயம் 250 ரூபாவாகவும், ஒரு கிலோ நிலக்கடலை 450 ரூபாவாகவும், ஒரு கிலோ சீனி 275 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளது. (நி-6)

# கிராம உத்தியோகத்தர்களுக்கு தீர்வில்லையேல் தொழில்சார் நடவடிக்கை கடுமையாகும்

## அநுர எச்சரிக்கை

(கொழும்பு)

கிராம உத்தியோகத்தர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படாவிட்டால் தமது தொழில்சார் நடவடிக்கைகள் கடுமையாக்கப்படும் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர திஸாநாயக்க பாராளுமன்றில் எச்சரித்துள்ளார்.

கிராம உத்தியோகபூர்வ சேவையை ஸ்தாபிக்காமை, தனித்துவமான சம்பளம் கிடைக்காமை, கிராம உத்தியோகத்தர்களுக்கு தேவையற்ற அழுத்தங்கள் போன்ற பிரச்சினைகள் எழுந்துள்ளதாகவும், கடந்த சில நாட்களாக உத்தியோகபூர்வ விடுமுறை மற்றும் வேலைக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கிராம உத்தியோகத்தரின் சேவையானது எட்டு மணித்தியாலங்களுக்கு மட்டுப்படுத்தப்படவில்லை எனவும், நீண்டகாலமாக அவர்களது தொழில்சார் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-6)

# பல்கலை ஜனநாயக ஊழியர் யாழில் கவனயீர்ப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

சம்பள உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுவரும் யாழ். பல்கலைக்கழக ஜனநாயக ஊழியர் சங்கத்தினரால் நேற்று கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பல்கலைக்கழக வளாகத்திலிருந்து ஊர்வலமாக வந்த பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள், பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவாயிலில் போராட்டத்தில் ஈடுபட்டனர். "ஊழியரின் பொருளாதார நிலைமையை கருத்திற்கொள், MCA கொடுப்பனவை அதிகரி, கல்விசாரா ஊழியர்களை மாற்றான் வீட்டு பிள்ளையாக்காதே" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொழிற்சங்க கூட்டுக்குழுவினருடன் இணைந்து ஜனநாயக ஊழியர் சங்கத்தினர் இந்த கவனயீர்ப்பு போராட்டத்தினை ஏற்பாடு செய்திருந்ததமை குறிப்பிடத்தக்கது. (நி-6)


## மரண அறிவித்தல்

### அமரர்.திரு. செல்லர் நடேசகாந்தன்



வேலணை தெற்கைப் பிறப்பிடமாகவும் கச்சேரி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் நடேசகாந்தன் (ஓய்வு பெற்ற ஆசிரியர் நல்லூர் ஸ்தான சி.சி.த.க பாடசாலை) அவர்கள் 22.05.2024 நேற்று புதன்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லர்-செல்வதி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அமரர் பரம்சோதி-புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் ஜெகதீஸ்வரியின் (யாழ்.போதனா வைத்திய சாலை உணவு மேலாளர்) அன்புக் கணவரும் கௌடில்யன் (நிர்வாக உத்தியோகத்தர் வலம்புரி ஹோட்டல்) சரண்யா (யாழ்.மருத்துவ பீட விரிவுரை உதவியாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிந்தாமணி (ஓய்வு பெற்ற அதிபர்) அமரர் சிவஞானம் ஆகியோரின் அன்பு சகோதரரும், ஞானேஸ்வரி, தேவி மற்றும் சர்வேஸ்வரி, அம்பிகை பத்மஜோதியின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது ஈமைக் கிரிகைகள் 23.05.2024 நாளை வியாழக்கிழமை காலை 11 மணி அளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று கொழும்புத்துறை துண்டி மயானத்திற்கு பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

87/8 சென் ஜோன்ஸ் லேன்,
கச்சேரி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

(c-421)

தகவல்:
குடும்பத்தினர்




வைகாசி விசாகத்தினை முன்னிட்டு, நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. இதன்போது ஷண்முக திரவ்ய மஹா அபிஷேகம் ஷண்முக நியாஸம், சகஸ்ர நாம அர்ச்சனை நடைபெற்றது. (படம்: சிவசாந்தன்)


## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
1939 - 03 - 17



இறப்பு
2020 - 06 - 05

மணிவாசகப் புரவலர்
உயர்திரு. மயிலு சிவானந்தன்
(ஓய்வு பெற்ற ஆசிரியர் யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, சமாதான நீதிவான்)
திதி-வைகாசி பூரணை (23.05.2024)

அப்பா!
எம் உச்சரிப்பு அகராதியில் இருந்து
அப்பா என்ற சொல் உதிர்ந்து
ஆண்டுகள் நான்கு ஆனது அப்பா
உங்களை நினைக்கும் போது
ஆறுதல் சொல்ல கண்ணீர்
மட்டுமே எமக்கு...!
என்றும் உங்கள் ஆத்மா
ஆடிப் பாலகணபதியான் பாதம்
சேரப் பிரார்த்திக்கும்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

அல்வாய். (c-428)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபரீத...

விபரீத முடிவெடுத்த இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் சரசாலையைச் சேர்ந்த 37 வயதான இளைஞனே உயிரிழந்தவராவார்.

மேற்படி இளைஞன் வீட்டில் ஆட்கள் இல்லாத சமயம் பார்த்து வீட்டின் வெளி விறாந்தையில் தூக்கிட்டு உயிரிழந்திருப்பதாக தெரிய வருகிறது.

உயிரிழந்தவரது சடலம் மீட்கப்பட்டு மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(ம-7,10,30)

## ஒரே பிரசவத்தில்...

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் மருத்துவ வரலாற்றில் ஒரு கருவில் நான்கு குழந்தைகளை ஆரோக்கியமான முறையில் தாய் ஒருவர் பிரசவித்துள்ள சம்பவம் இடம் பெற்றுள்ளது.

மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த கரிகரன் கிருஸ்ண வேணி என்னும் தாயே இந்த குழந்தைகளை பிரசவித்துள்ளார்.

மருத்துவதுறையின் வரலாற்றில் இயற்கை முறையில் இவ்வாறு கருத்தரிப்பதானது அரிதான விடயமாகவே காணப்படுவதாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்திய நிபுணர் வைத்தியர் சரவணன் தெரிவித்தார். (ம-7,10)

## அடுத்த...

ளுக்கு கருத்துத் தெரிவித்த திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த இதனைத் தெரிவித்தார்.

அடுத்த சில நாட்களில் நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் கடும் மழை மற்றும் பலத்த காற்று வீசக் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து, திணைக்களம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

அத்துடன், தற்போது கடலுக்கு சென்றுள்ள பல நாள் மீன்பிடி படகுகள் பாதுகாக்கப்பட்ட பகுதிகள் ஊடாக செல்லுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக அதன் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (ம-7,10)

## தவறி வீழ்ந்த...

நேற்று புதன்கிழமை காலை 9.00 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

அல்லைப்பிட்டி 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான அந்தோனிப்பிள்ளை றோமன் மெயின்டன் (வயது-58) என்பவரே உயிரிழந்தவராவார்.

காலையில் மீன்பிடிப்பதற்காக கட்டுமரத்தில் சென்றபோது அவர் கடலில் தவறிவீழ்ந்ததாக தெரிவிக்கப்பட்டது.

மீனவர்களால் மீட்கப்பட்ட அவர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு உடனடியாக கொண்டு சென்றபோது அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.(ம-7,10,60)

## பொலிஸ்...

செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் உள்ளிட்ட இளைஞர்கள் இடையே மோதல் ஏற்பட்டு வாள்வெட்டில் முடிந்துள்ளது.

இதில் பொலிஸ் உத்தியோகத்தர் உள்ளிட்ட மூவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வரும் நிலையில், தனிப்பட்ட முரண்பாடே வாள்வெட்டு சம்பவத்திற்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

வாள்வெட்டுத் தொடர்பான காணொளியும் ஊடகங்களில் வெளியாகியுள்ளது. (ம-7,10,33)

நாக அதிஷ்ட சுரபி
கனகலிங்கம் திலகவதி NLB/DLB
22.05.2024 NLB தனநிதானய லொத்தர் சீட்டிழுப்பில்
முதல் பரிசு **20 இலட்சம்** யாழ்.முகவர் கனகலிங்கம்
திலகவதி ஊடாக வெல்லப்பட்டுள்ளது.
நாக அமுத சுரபி நயினையில் தொடரும்
நாக அதிஷ்ட சுரபி யாழில் தொடரும்
(C-0433)
077 603 1723

## இலங்கையின்...

சுட்டிக்காட்டியுள்ளார்.

மிகப்பெரிய கொலைக் குற்றவாளி தண்டிக்கப்படவில்லை. அவர்களுக்கான தண்டனை உடனடியாக வழங்காமல் அவருக்கு விடுதலை வழங்கப்படுகின்றது எனவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பில் நேற்றைய பாராளுமன்ற அமர்வில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

இலங்கையில் நடந்த படுகொலைகளுக்கு இதுவரை நீதி வழங்கப்படவில்லை. பலரும் நீதிக்காக போராடி வருகின்றனர். இலங்கையில் நீதி மரணித்து விட்டது. ஆனால் நாட்டில் புதிய புதிய சட்டங்கள் கொண்டு வரப்படுகின்றன.

இலங்கையில் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. சுற்றறிக்கை ஒன்று வெளியிடும்போது தனிச் சிங்கள மொழியில் மட்டும் வருகின்றது. அண்மையில் அரச தலைவர் செயலகத்தால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகூட தனிச் சிங்களத்தில் மட்டுமே வெளியிடப்பட்டுள்ளது என்றார். (ம-7,10)

## விடு...

கள் இராணுவச் சோதனைச் சாவடி ஊடாக 5 கிலோமீற்றர் தூரம் கால்நடையாகப் பயணித்தே பார்வையிட அனுமதிக்கப்பட்டனர்.

இந்த விடயத்தை நிலங்களின் உரிமையாளர்கள் வடக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர். (ம-7,10)

உரிமையாளர்களும் அழைக்கப்பட்டு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இருந்தபோதும் அந்த நிலங்களுக்கான பாதை விடுவிக்கப்படவில்லை. இராணுவ முட்கம்பி வேலிகளும் அகற்றப்படவில்லை.

இவ்வாறு விடுவிக்கப்பட்ட நிலங்களை உரிமையாளர்

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2024.05.22
சீட்டிழுப்பு இலக்கம் 5483
Z 1 1 4 3 8 9
அத சம்பத Z 4 3 8 9
சீட்டிழுப்பு இலக்கம் 58
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.05.22
சீட்டிழுப்பு இலக்கம் - 1513
Z 22 32 40 49 Z
Double Chance 62162

மெகா பவர்
திகதி 22/05/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1831
B 26 12 20 21 60
72719

லக்கி 7 VIP
திகதி 2024.05.22
சீட்டிழுப்பு இலக்கம் 309
U 3 4 1 9 4 8 U

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3725
சீட்டிழுப்பு திகதி 22.05.2024
S 07 30 58 64
S 23586

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.05.22
சீட்டிழுப்பு இலக்கம் 0792
மகரம் 07 30 58 64 மகரம்
00437 48

உத்தியோகபூர்வ முடிவுகள்
22.05.2024 வெற்றி வாரம் 191 வர்ணம் பச்சை
Z 4 3 6 4 2 0
U 24133
அடுத்த சுப்பர் ஜக்பொட் 22,719,604.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2457 வர்ணம் சிவப்பு 22.05.2024 புதன்கிழமை
29 37 50 70 N
78527
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 89,734,780.80
DLB

சனிதா
திகதி 2024.05.22 வெற்றி வாரம் 4618
03 33 37 67 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.59,576,948.80
35409
DLB

சீட்டிழுப்பு வாரம் 4169 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2024.05.22 தினம் புதன்கிழமை
01 02 20 21
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,099,510.40
948385
DLB

I 28 01 30 45 66
1633
386169
22.05.2024 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 523,992,192.20
DLB

ஜயோதா Jayoda
திகதி 2024.05.22 வெற்றி வாரம் 2027 வர்ணம் மஞ்சள்
06 14 40 61 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,550,864.00
49257
DLB

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் : 2283
சீட்டிழுப்பு திகதி : 2024.05.22
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.114,987,445.60
11 31 42 69 F
625471
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# K.P.C

இருபாலை வீதி - கோண்டாவில் (ஐயப்பன் கோவில் அருகில்)

## A/L 2026
## வர்த்தகப்பிரிவு

ஆரம்பம் : 24.05.2024
வெள்ளிக்கிழமை காலை 9.30

பொருளியல் : MR.S.JEYAKUMAR
கணக்கீடு : MR.A.T.SUREN
வணிகக்கல்வி : MR.T.S.RICHI
ICT : MR.T.LAVAN

(828)

தொடர்புகளுக்கு : 077 723 8597


# புலமைப்பரிசில் பரீட்சைக்கு 27 ஆம் திகதி முதல் விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

தரம் 5 மாணவர்களுக்காக நடத்தப்படும் 2024 புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பான அறிவிப்பை பரீட்சைகள் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

அதன்படி, பரீட்சை செப்டெம்பர் 15, 2024 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மே 27 முதல் ஜூன் 14 வரை இணையம் மூலம் விண்ணப்பிக்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)


## வீட்டுடன் காணி விற்பனைக்கு

நகுலேஸ்வரா வீதி (கீரிமலை சிவன் கோவில் வீதி) ஆடை சந்திக்கு அருகாமையில் மெய் கண்டான் பாடசாலைக்கு செல்லும் வீதியில் 20 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

(846)

077 728 6061

## DCM யாழ் நகர்

வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை

### A/L 2026
கலை, வர்த்தகப் புதிய பிரிவு

ஆரம்பம் : 25.05.2024 காலை 8.00 மணி (சனி)

முன் பதிவுகளை அலுவலகத்தில் மேற்கொள்ளலாம்.

நிர்வாகம் : 077 7789 815

(C-0430)

## உடனடி வேலைவாய்ப்பு

- காட்சியறை முகாமையாளர்கள்
- காசாளர்
- கணனி இயக்குனர்கள்
- களஞ்சிய பொறுப்பாளர்
- களஞ்சிய உதவியாளர்கள்
- அலுவலக உதவியாளர்கள்
- விற்பனை உதவியாளர்கள்
- கணக்கு பதியுனர்கள்

மேற்படி பதவிகளுக்கு பொருத்தமான ஆண் / பெண் இருபாலாரும் தங்கள் சுயவிபரத்தை கீழேயுள்ள whatsapp இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.

(c-0429)

077 509 6394

## V2 VISA SERVICES

கனடா Visit Visas

077 77 20 322
077 77 19 322

Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-0433)

## வேலையாட்கள் தேவை

LEGEND OF ARCH FIRM PVT LTD

நிறுவனத்திற்கு மேசன், கூலி ஆட்கள் தேவை. திறமைக்கேற்ப சம்பளம் நாள் அல்லது Task அடிப்படையில் வழங்கப்படும். (யாழ் மாவட்டத்தில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது)

Director

076 274 7411
077 288 4611

(842)

## கொழும்பில் அறைகள், வீடு நாள் வாடகைக்கு

தெகிவளையில் காலி வீதி - .PIZZA HUTக்கு முன்பாக குளிரூட்டப்பட்ட அறைகள் மற்றும் வீடுகள் சகல வசதிகளுடனும் நாள், மாத வாடகைக்கு விடப்படும்.

A/C Room - 6000/-இல் இருந்து
வீடு - 12000/-இல் இருந்து

(C-0432)

V2 GUEST 0743900360 0743900361


# மரண அறிவித்தல்

தோற்றம்
02 . 02 . 1934



மறைவு
21 . 05 . 2024

## திருமதி கதிரமலை சிவக்கொழுந்து

புதுவளவு, நெல்லியடி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கதிரமலை சிவக்கொழுந்து அவர்கள் (21.05.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சின்னாச்சி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - தெய்வானை தம்பதியினரின் அன்பு மருமகளும் பொன்னையா கதிரமலை அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற மகாலிங்கம், பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சூரியகுமாரன், காலஞ்சென்ற புஸ்பலோஜனி, காலஞ்சென்ற சந்திரகுமாரன் மற்றும் உதயகுமாரன், நந்தகுமாரன், மீனலோஜனி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சாந்தினி, சிவானந்தன், காலஞ்சென்ற சித்திரா, சரஸ்வதி, யசோதா, சிறீதரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் கோகிலன் - சிவசோபிதா, ருஷாந்தன் - ஜனனி, ராகுலன் - ஜனனி, கபிலன் - சுகி, ஹரிகிருஷ்ணி, விஜீவன் - மௌலினி, சொரூபி, சீத்தா, வித்யா, திவ்வியன் - காயத்திரி, லக்ஷனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அஷ்வினா, அனிருத்தா, ஹர்சிதா, ஹனித்ரா, கவிஷன், கஜானி, விஷ்வா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.05.2024) வெள்ளிக்கிழமை காலை 08.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

021 226 4534
075 311 2086

தகவல்:
குடும்பத்தினர்

(C-0426)


## TECHNO WORLD
## தொழில்நுட்பக் கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.

### A/L 2026

ஆரம்பம் : 25.05.2024 | நேரம் : காலை 8.30

| | |
|---|---|
| தொழில்நுட்ப வியலுக்கான விஞ்ஞானம் | - ராகவன் (B.Sc)<br>முருகநிரோஜன்(B.Sc)<br>அச்சுதன் (B.Sc) |
| பொறியியல் தொழில்நுட்பம் | - அருண்குமார் (B.Tech Hons(Eng)<br>சிவஜன் (NDT, HNDCT)<br>நிசாந்தன் (HNDE) |
| உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் | - திருக்குமரன் (B.Sc in Agri)<br>சுபாங்கன் (B.Sc in Agri)<br>பவனீதன் (B.Sc in Agri) |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் | - நஜன் (B.Sc)<br>சிவச்செல்வன் (B.IT, M.Ed)<br>கவாஸ்கர் (B.IT) |
| விவசாய விஞ்ஞானம் | - சாரங்கன் (B.Sc in Agri)<br>திருக்குமரன் (B.Sc in Agri)<br>சுபாங்கன் (B.Sc in Agri) |
| புவியியல் | - S.S.கோகில் (B.A, P.G.D.E, M.Ed) |
| ஊடகக் கற்கை | - கஜிதரன் (B.A) |
| கணிதம் | - கிரிசாந் |
| சித்திரம் | - ஜெயந்தன் (B.A) |

(C-0427)

தொடர்புகளுக்கு : 077 017 5346


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல 191, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org